1562

பாலால்— ரத்ன, தங்க, வெள்ளி நகை வியாபாரிகள்
216, சைனாபஜார் ரோட், சென்னை.

Regd. No. M. 916.

ஸ்ரீ:

# வேதாந்த தீபிகை.

ஸம்புடம் 19] விபவஹு— ஐப்பசிமீ [ஸஞ்சிகை

OF THE REG
12 1929



பத்ராதிபர்:— ஸ்ரீ. வாஸுதேவாசார்யா.

வருஷ சந்தா ரூ. 3.] October, 1928. [ஸஞ்சிகை 1-க்கு அணா 6

ஸ்ரீ:

॥ ஸ்ரீமதே ஹ்ருஷீகேச ஸிம்ஹவரப்ரஹ்மணே நம: ॥

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 19.] விபவ ஸூ, ஐப்பசி மீ [ஸஞ்சிகை 1

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே ।
வபுரளககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேநவத்யா

[ ஸ்ரீ பாகவதம். 1-9-23 ]

ஸ்ரீ:

## ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்.

[ஸ்ரீ உப. வித்வாந். ஏ. வி. கோபாலாசார்யர் எம். ஏ., பி. எல்]

ஸங்கல்ப ஸூர்யோதயம் என்று நாமகரணம் செய்ததற்கு உள்ள பாவங்களை முதலில் பராமர்சிப்போம். ப்ரபோத சந்த்ரோதயம் என்பதற்கு எதிர்த் தட்டாக இந்தத் திருநாமம் சாற்றப்பட்டிருக்கிறது என்பது ப்ரஸித்தம். இந்த க்ரந்தத்திற்கு உள்ள வைலக்ஷண்யம் இதன் பெயரிலேயே ஸூசிப்பிக்கப்படுகிறது. நம்முடைய ப்ரக்ருஷ்டமான ஜ்ஞாநத்தால் மோக்ஷம் அடையலாம் என்பார் பலர். நமது ஜ்ஞாநத்தால் ஸந்தோஷிக்கும் ஈச்வரனுடைய அநுக்ரஹ ஸங்கல்பத்தால் மோக்ஷஸித்தி என்பது நமது கொள்கை. நம்முடைய ஜ்ஞாநத்தால் ஆராதிக்கப்பட்ட ஈச்வரனுடைய மோசக ரூபமான அநுக்ரஹ ஸங்கல்ப ஸூர்யன் உதிக்கும்போது நமக்கு ஸம்ஸார இரவு நீங்குகிறது. தேஹாகார காராக்ருஹத்திலிருந்து அடியோடு விடுபடுவது மோக்ஷம். 'அப்படித் தேஹத்திலிருந்து ஆத்மா விடுபடுங்காலத்தில், எந்த வெளிச்சத்தால் ப்ரஹ்மத்தை உடனே அநுபவித்துப் ப்ரஹ்ம நாடியில் நுழைந்து அது மோக்ஷம் அடைகிறது? நூற்றொரு நாடிகளில் ப்ரஹ்ம நாடியானது

186789

ஸ்ரீ:

# விஷய ஸூசிகை.


| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம் - ஸ்ரீ. உ. வே. வித்வான் ஏ. வி. கோபாலாசார்யர் எம். ஏ. பி. எல். ... ... ... | 1 |
| 2 | வடிவழகிய நம்பியின் வைபவ விசேஷம்— ஆரியூர் ஆ. வா. பத்மநாப ராமாநுஜதாஸன் ... ... | 9 |
| 3. | ஸ்த்ரீகளுடைய ஸ்வாதந்த்ர்யமும் அவர்களின் சட்ட ஸபாப்ரவேசமும்— ஸ்ரீ உ. வே. வித்வான் த. வே. ஸ்ரீநிவாஸாசார்யர், திருச்சி ... ... | 18 |
| 4 | ஸ்ரீவை. ஸி. ஸபை ஸம்பந்தமான விஜ்ஞாபனம்— ... | 26 |
| 5. | கடிதங்கள் ... ... ... ... | 28 |
| 6. | பத்ராதிபரின் குறிப்புகள்:— ... ... ... | 29 |
| 7. | ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹம்—ஸ்ரீ உ. வே. வாஸுதேவாசார்யர் ... | 185 |



**வைரங்கள்.**

**T. B. MEHTA & SONS,**

DIAMOND MERCHANTS,

453, Mint Street, P. T. Madras

**Phone No. 3555.**

எந்த வெளிச்சத்தால் ப்ரவேசிக்கப்படுகிறது?' என்னும் விஷயத்தில் "ததோகோ(அ)க்ரஜ்வலநம் தத்ப்ரகாஶிதத்வாரோ வித்யாஸாமர்த்யாத் தச்சேஷகத்யநுஸ்ம்ருதியோகாச்ச ஹார்தாநுக்ருஹீத: ஶதாதிகயா'' (4-2-16) என்கிற ஸூத்ரமும், அதனால் பராமர்சிக்கப்படுகிற "ஹ்ருதயஸ்யாக்ரம் ப்ரத்யோததே தேந ப்ரத்யோதேநைஷ ஆத்மா நிஷ்க்ராமதி'' என்கிற ச்ருதியும் ப்ரமாணங்கள். உதாஹரிக்கப்பட்ட இந்த ஸூத்ரம் எல்லா ஸூத்ரங்களிலும் தீர்க்கமானது. மோக்ஷத்திற்குக் காரணமான ரஹஸ்யத்தை வெளியிடுவதில் ஸூத்ரகாரர் கருணையாலும் ஆநந்தத்தாலும் ஆவிஷ்டராய், சுருங்கச் சொல்லவேண்டும் என்னும் ஸூத்ர நியமத்தை மறந்து, மிகவும் விரிவாய் உரைத்தார் போலும்! இங்கே ஹார்த்தனை பரமாத்மாவின் அநுக்ரஹம் மோக்ஷத்திற்கு அவ்யவஹிதமான காரணமென்று ஸ்பஷ்டமாய்ச் சொல்லப்படுகிறது. அநுக்ரஹமாவது அநுக்ரஹ ஸங்கல்பத்தைக் காட்டுகிறது. இந்த அநுக்ரஹம் உதயமாகி, அதன் வெளிச்சத்தினால் மோக்ஷத்வாரமான ப்ரஹ்ம நாடியில் ப்ரவேசம் ஏற்படுகிறது. இந்த ஸூத்ர பலம் நமக்கே உளது என்பதை ஸூசிக்கிறது க்ரந்தத்தின் திருநாமம். அநுக்ரஹ ஸங்கல்பம் என்கிற ஸூர்ய வெளிச்சத்தால்தான் ஸம்ஸாரமென்கிற நள்ளிருள் நீங்கும் என்னும் நமது கொள்கை ஸூசிக்கப்படுகிறது. தேஹத்தை விடும் போது சந்த்ரோதயம் ஆகிறது என்று சொன்னால், மோக்ஷ மார்க்கமாகிய அர்ச்சிராதி மார்க்கம் நேர்கின்றது என்னும் நிச்சயம் ஏற்படமாட்டாது. ஏனென்றால் சந்திரன் தூமாதி மார்க்கத்திலும் இருக்கிறான்; அர்ச்சிராதி மார்க்கத்திலும் இருக்கிறான். இரண்டு மார்க்கங்களுக்கும் உள்ள பொதுவான சந்த்ரனைச் சொன்னால், மோக்ஷவழியோ வேறு வழியோ என்கிற ஸந்தேஹம் தீரமாட்டாது. ஸூர்யனுடைய உதயம் அர்ச்சிராதி மார்க்கத்தில்தான் உண்டு. அதைச் சொல்லிவிட்டால் ஸந்தேஹத்திற்கு இடமிராது. ஸம்ஸாரத்தை ராத்ரி என்றும் காளராத்ரி என்றும் எல்லோரும் வ்யவஹரிக்கிறார்கள். சந்த்ரோதயம் இருளைப் போக்கினாலும் இரவைப்போக்கமாட்டாது. இரவில்தான் சந்த்ரோதயம் ஸம்பவிக்கும். ஸம்ஸாரமாகிய இரவு ஸூர்யோதயத்தால்தான் நீங்கும். இந்த ஸ்வாரஸ்யம் "க்ஷிப்ரம் ஸம்ஸ்ருதி ஸுஷுப்தீம் க்ஷிபதி'' என்று ஸ்வாமியால் வ்யக்தமாய்க் காட்டப்பட்டிருக்கிறது. நாம் விழிப்பு என்று நினைப்பதைப் பெருந் தூக்கமென்று முனிவர்கள் நினைக்கிறார்கள் என்று ஸ்ரீ கீதையில் அருளிச்செய்யப்பட்டிருக்கின்றது. ஸம்ஸாரம் பெருந்தூக்கம்; மோக்ஷம் எல்லையில்லாத விழிப்பு. ஸம்ஸாரத் தூக்கம் சந்த்ரோதயத்தால் தொலையாது; ஸூர்யோதயத்தால் அத்தூக்கத்திலிருந்து விழிப்பு உண்டாகும். இந்த ஸ்வாரஸ்யமும் "ஈயா ஈஹாயா ஸித்தீ, ஸத்தாஶேஷ ஸு... ஸம்ப்ரபோதய:''



என்று ஸ்வாமியால் தெளிவாகக் காட்டப்பட்டிருக்கிறது. சந்த்ரோதயம் ப்ராஹ்ம முஹூர்த்தத்தில் ஏற்படுவது துர்லபம். ஸூர்யோதயம் அந்தக் காலத்தில்தான் ஏற்படும். ப்ராஹ்ம முஹூர்த்தத்தில் ப்ரஹ்ம ப்ராப்தி சொல்வது உசிதம். அந்த ஸாத்விக காலத்தில் எல்லோரும் பகவத் ஸ்தோத்ரங்களைச் சொல்வதினால் பக்தி ப்ரசயத்தை (அல்லது பக்தி வ்ருத்தியை) அடைகிறார்களென்பது ஸர்வாநுபவஸித்தம். இந்த ஸ்வாரஸ்யமும் "பக்தி ப்ரஜாயதே ஶிநவே'' என்று ஸூசிக்கப்பட்டிருக்கிறது. "ம்ருதி நேதி தெஹ ஸம்பந்தஸ்ய யாவத்தேஹ ஹாநிகவா தூபஜயதி அ'' என்று இரவில் தேஹத்தை விடுவதனால் மோக்ஷத்திற்குக் குறைவில்லையென்று கூறப்பட்டிருந்தாலும், ஆக்ஷேபத்திற்கே இடமில்லாமல் ஸத்வ ப்ரசுரமான ஸூர்யோதய காலத்தில் மோக்ஷத்தைச் சொல்வது ஸ்வாரஸ்யமாகும்.

முதல் ச்லோகத்தின் ஸ்வாரஸ்யத்தை மாத்ரம் முதலில் பராமர்சிப்போம். முன் பாதியில் ப்ரஹ்மத்தின் லக்ஷணம் மிகவும் அழகாகச் சொல்லப்படுகிறது. ப்ரஹ்மத்தைத் தவிர மற்ற தேவதைகளை உபாஸநம் செய்வதில், உபாஸிக்கப்படும் தேவதைகள் அந்த உபாஸநத்துக்குப் பலத்தைக் கொடுக்க ஸங்கல்பிக்கிறார்கள் என்பது இல்லை. ப்ரஹ்மம்தான் அந்தப் பலத்தைக் கொடுக்கிற ஸங்கல்பத்தைச் செய்யும் என்று எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஏனென்றால் தேவதைகள் ப்ரஹ்மத்தின் உடல்கள். ப்ரஹ்மம்தான் அந்த உடல்களுக்கு உயிர். உடல் உயிர் இவ்விரண்டில் உயிர்தான் ஸங்கல்பத்தைச் செய்யக்கூடும்.

"யோ யோ யாம் யாம் தநும் பக்த: ஶ்ரத்தயார்சிதுமிச்சதி ।
தஸ்ய தஸ்யாசலாம் ஶ்ரத்தாம் தாமேவ விததாம்யஹம் ॥
ஸ தயா ஶ்ரத்தயா யுக்த: தஸ்யாராதநமீஹதே ।
லபதே ச தத: காமாந் மயைவ விஹிதாந் ஹி தாந் ॥

என்று கீதையில் இந்த அம்சம் வெளியிடப்பட்டிருக்கிறது. 'தநும்' என்பதால் மற்ற தேவதைகள் உடல் என்றுகாட்டப்பட்டிருக்கிறது. அங்கே 'பக்த:' என்று உபயோகிக்கப்பட்டிருக்கும் பதத்தை அநுஸரித்து இங்கே "பக்தி" என்று ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறது. இந்த 'பக்தி' பதத்தில் அந்த ப்ரமாணம் ஜ்ஞாபகப்படுத்தப்படுகிறது. 'மயைவ விஹிதாந்' என்பதற்கு ப்ரஹ்மமாகிய தன்னாலேயே ஸங்கல்பிக்கப்பட்டுக் கொடுக்கப்படுகிறது என்பது அர்த்தம். உபாஸிக்கப்படும் தேவதை பலப்ரதாந ஸங்கல்பம் செய்வதில்லை. 'பக்தி' என்றால் உபாஸநம். 'எந்தத் தேவதையை உபாஸநம் செய்தால், உபாஸிக்

கப்படும்; தேவதையே பலஸங்கல்பம் செய்து, அந்த ஸங்கல்பம் உதிக்குமோ’ என்று லக்ஷணம் சொல்லப்பட்டால், அது ஸ்ரீமந்நாராயணனைத் தவிர வேறு தேவதைக்கு ஒவ்வாது. மற்றைத் தேவதோபாஸநங்களில் உபாஸிக்கப்படும் தேவதை வேறு, பலம் கொடுக்கும் பரதேவதை வேறு. நாராயணோபாஸநத்தில் மாத்ரம் இவ்விரண்டும் ஒன்றாகும். இந்த ஸ்வாரஸ்யம் “யத்பக்தி ப்ராப்யா ஸ்வகே............ஸங்கல்ப ஸூர்யோதய: |” என்று தெளிவாகச் சொல்லப்படுகிறது. “பலமத உபபத்தே:” என்பது ப்ரஹ்ம ஸூத்ரம். “ஸர்வம் ஹி ஸர்வயஜ்ஞாநாம் போக்தா ச ப்ரபுரேவ ச” என்பது கீதா வாக்யம். “யஸ்மை ப்ராப்யாய ஸாதநதயா ப்ரயோக்துமிஷ்டம் தத் தத் ஸமர்ப்யதே, ஸ ததா ப்ராப்யதயா ஸாதநத்வேந ஸமர்ப்யதே இதரஸ்ய து தேவதாந்தராணாம்” என்று அந்த ச்லோக தாத்பர்ய சந்த்ரிகை.

முன்பாதியில் நாடகத்தின் திருநாமமும் வஸ்துவும் சொல்லப்படுகின்றன. பக்தி ப்ரசயம் என்பது, இடைவிடாத அப்யாஸத்தால் கிடைக்கும் வைசத்யாதிசயத்தைச் சொல்லுகிறது. ‘ஸக்தி’ என்பது ஸத்வமயமானதாலும், ஸத்வத்தின் நிறம் வெண்மை என்று பெரியோர்கள் சொல்வதாலும், பக்தியின் மிகுதி பகல் வெளிச்சத்தின் ஆரம்பம் என்று ரூபணம் செய்யப்படுகின்றது. ‘ப்ராயம்’ என்னும் சப்தம், ‘ப்ராயமஹோதயம்’ என்கிற ப்ரயோகத்தை அநுஸரித்து மங்களத்தைக் காட்டும்; ‘க்ஷிப்ரம்’ என்னும் சப்தம், “க்ஷிப்ரம் ஹி மாநுஷே லோகே ஸித்திர்பவதி கர்மஜா” என்னும் வசநத்தைக் காட்டிக்கொடுத்து, அதைப்போல் வேகமாய் மோக்ஷத்தைக் கொடுக்கும் என்பதைக் காட்டுகிறது. ‘அஜ்ஞாநம்’ என்கிற இருள், ஸம்ஸார ராத்ரி என்று சொல்லப்படுகிறது. “தஸ்மிந் த்ருஷ்டே பராவரே” என்னும் ச்ருதியில் ஒருவனுக்கு ப்ரஹ்ம தர்சநம் ஆகும்போது அவனது கர்மங்கள் தொலைகின்றனவென்று சொல்லியிருப்பதற்கு, அந்தக் காலத்தில் பகவானுடைய ஸங்கல்பத்தினால் அவை தொலைகின்றன என்று அர்த்தம் கொள்ளவேணுமாதலால், ஸங்கல்ப ஸூர்யன் த்ருஷ்டமான பொழுது ஸம்ஸாரம் தொலைகிறதென்று இங்கே சொல்லப்படுகிறது. ‘க்ஷேத்ரீ’ என்னும் பதம், க்ஷேத்ரஜ்ஞனைச் சொல்லுகிறது. சரீரத்திற்குக் கீதையில் ‘க்ஷேத்ரம்’ என்று பெயர். சரீரம் தொலையப்போகிற ஸமயத்தில் ‘க்ஷேத்ரீ’ என்னும் சப்தம் இவரைச் சரீரத்தோடு பார்ப்பதற்கு இதுதான் கடைசி க்ஷணம் என்பதை ஸூசிக்கிறது. ‘க்ஷேத்ரிண: ஸம்ஸ்ருதி பந்தமோக்ஷம் க்ஷிபதி” என்பதற்கு, சரீரமாகிய காராகாரத்தில் இருப்பவனுடைய காராகார பந்தத்தைத் தொலைக்கிறதென்று பாவம். திவ்ய க்ஷேத்ரங்களில் வாஸம் செய்துகொண்டு தேஹத்யாகம் செய்பவர்களுக்கு முக்தி ஸுலபம் என்



னும் அம்சமும் ‘க்ஷேத்ரத்தில் இருப்பவர்’ என்னும் அர்த்தத்தால் ஸூசிதமாகின்றது. அவர்களுக்குச் சீக்ரமாய்ப் பலம் கிடைக்குமென்று ‘க்ஷேத்ரிண: க்ஷிப்ரம்’ என்ற பதச்சேர்க்கையினால் ஸூசிதம். பாகவதர்கள் திவ்ய க்ஷேத்ரங்களில் வஸிப்பதாக இங்கே ப்ரஸ்தாவனையில் சொல்லப்படுகின்றது. ஆறாவது அங்கம் முழுவதும் க்ஷேத்ராந்வேஷணத்தை வர்ணிக்கிறது. க்ஷேத்ரம் என்பது க்ருஷி செய்யும் பூமியைச் சொல்லும். பக்தியை க்ருஷியாகச் சொல்வது வழக்கம். சரீரமென்னும் க்ஷேத்ரத்தில் பக்தி என்னும் க்ருஷியைச் செய்து, மோக்ஷம் என்னும் பலத்தை அடைய வேண்டும். பக்தருக்குப் பலம் க்ருஷி செய்வது. அவர்களுக்கு மோக்ஷம் க்ருஷ்ட பச்யம். அடுத்த ச்லோகத்தில் சொல்லப்படுகிற ப்ரபந்நனுக்கு மோக்ஷம் பயிர்த்தொழில் செய்யாமல் கிடைக்கும். இவ்விஷயம் ‘அக்ருஷ்டபச்யம் ஸ்வயமேவ ஸம்பவதி’ என்ற தயாசதக ச்லோகத்தால் அறியலாகும். இங்கே பயிர்த்தொழில் செய்து தாமே ச்ரமப்படுபவரான பக்தர்களைச் சொல்லுகிறது, க்ருஷீவல வாசியான ‘க்ஷேத்ரீ’ என்னும் சப்தம். க்ருஷீவலர் தாங்கள் அறுவடை செய்வது ஸூர்யோதயத்திற்கு முன்னரன்றோ? பலம் கைக்கு வருவது அந்தக் காலம். அந்த ஸ்வாரஸ்யமும் இங்கே சேருகிறதென்பது, ‘நிசாந்தே’ என்கிற சப்தத்தாலும் ‘க்ஷேத்ர’ சப்தத்தாலும் ஸூசிதம். ‘க்ஷேத்ரீ’ என்பதால் பீஜம் ஸூசிதம். முக்தி பீஜமாகிய பக்தியானது சரீரமென்னும் க்ஷேத்ரத்தில் க்ஷேத்ரஜ்ஞரால் விதைக்கப்பட்டு, வ்ருத்தி செய்யப்பட்டு விஸ்தாரப்படுத்தப்படுகிறது. பக்திதான் பீஜமாகையால் அதன் விஸ்தாரத்தைச் சொல்லும் ‘ப்ரசய’ சப்தத்தால், “காலேந ஸம்வர்த்திதேந தஸ்ய விரோபம் ஸ்தம்ப விஸ்தார மிவ” என்கிற முத்ரா ராக்ஷஸ ச்லோகம் ஜ்ஞாபகப்படுத்தப்படுகிறது. ‘க்ஷிபதி’ என்னும் சப்தத்தால் அங்குள்ள உபக்ஷேப சப்தத்தின் ஸ்மாரணம். ‘ஸம்ஸ்ருதி’ என்னும் பெயரில் விபரீதமான அர்த்தம் கொள்ளுகிறோம். துஸ்ஸரணத்திற்கு ஸம்ஸ்ருதி என்று பெயரிடப்படுகிறது. இந்த ஸ்வாரஸ்யம், அந்த வழி முழுவதும் இருட்டு வழி என்று அடுத்த பதத்தால் சொல்வதால் காட்டப்படுகிறது. ‘க்ஷேத்ர’ சப்தத்தால் நல்ல திவ்யதேச க்ஷேத்ரம் என்று கொண்டால் நல்ல க்ஷேத்ரத்தில் விதைக்கும் சாலியானது நல்ல ஸ்தம்பமாகிப் பலிக்கும். அது, விதைக்கும் வப்தாவின் குணத்தை அபேக்ஷிக்க மாட்டாது என்பது ஸூசிதம்.

‘ஸங்கல்ப’ என்பது ஸுதர்சந ஆழ்வானுக ஆகமங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விஷயம் “ஸத்ஸ்வ ஸதாநஸங்கல்ப விஷ்ணோர்ஹி ...ஸ்ய ப்ராயிதா பரமேச்வரஸ்ய வக்ஷீஸ்வர ஸுதர்சந” என்று இந்த ஸ்ரீகோசத்தில் 10-வது அங்கத்திலும் கூறப்பட்டிருத்தல் காண்க.

ஸுதர்சநர் தர்சநமாவது, ஸங்கல்பம் த்ருஷ்டி க்ஷமமாகிறதென்று சொல்லப்படுகிறது. ஸங்கல்பம் உதிக்கிறதென்று சொன்னது, எவருக்கு ஸுதர்சநம் அஸ்த்ரமாக இருக்குமோ அவரிடத்தில் தான் கூடும். ஆகையால், ஸுதர்சநர் நாராயணனுக்கு அஸ்த்ரம் என்பதைக் காட்டவேண்டிய ஆவச்யகதை ஏற்பட்டபடியால், ச்லோகத்தின் முன் பாதி முடிந்து பின் பாதி ஆரம்பத்தில் அஸ்த்ர விபூஷணங்கள் குறிக்கப்படுகின்றன. இருபத்தைந்து சிதசித் தத்வங்கள் ஸ்வதந்த்ரமாக தத்வங்கள் அல்லவென்பதும், அஸ்த்ரங்களாயும் பூஷணங்களாயும் விசேஷணங்களாக மட்டும் தத்வங்களாகு மென்பதும் காட்டப்படுகின்றன. ஸ்வதந்த்ரமாக அவைகள் இருப்பை உடையனவல்ல வென்றும் "நேஹ நாநாஸ்தி கிஞ்சந" என்கிற நிஷேத ச்ருதிக்கு இதுதான் அர்த்தமென்றும் தெரிவிக்கப்படுகிறது. கானலில் ஜலம் போல மூவுலகும் தோற்றம் மாத்ரமே என்று ப்ரபோத சந்த்ரோதயம் முதல் ச்லோகத்தில் சொன்னதற்கு எதிர்த் தட்டாக, இங்கே தத்வங்கள் என்று ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கின்றது. 'ஸ்ரீமந்நாராயண:' என்று முக்திதனையும் முக்த போக்யனையும் சொல்லுகிறது. 'ஸ்வஸ்தி' என்கிற பதமும் 'ஸ்ரீ' என்கிற பதமும் மங்கள பதங்கள். இந்த முதல் ச்லோகத்தில் பக்தி சொல்லப்படுகிறது.

இரண்டாவது ச்லோகத்தில் ப்ரபத்தி சொல்லப்படுகிறது. முண்டகோபநிஷத்தில், "ப்ரணவோ தநு: சரோஹ்யாத்மா ப்ரஹ்ம தல்லக்ஷ்யமுச்யதே । அப்ரமத்தேந வேத்தவ்யம் சரவத் தந்மயோ பவேத் ॥" என்னும் ச்லோகமும், "தநுர்க்ருஹீத்வா" என்னும் அதற்கு முன் ச்லோகமும், இரண்டாவது ச்லோகத்திற்கு மூலங்கள். முண்டகோபநிஷத் நிர்குண வித்யையாகிய பரவித்யையைச் சொல்லுகிறது என்பது நிர்குணவாதிகளின் கொள்கை. வில்லை இழுக்காமல் அம்பை எறிய முடியாது. குணம் என்கிற நாண் இல்லாமல் வில்லை இழுக்க முடியாது. மேலே சொன்ன இரண்டு முண்டக ச்ருதிகளும் பூர்ணோபமா கர்ப்பமான ரூபணத்தில் குணங்களால் இழுக்கப்படுவதை அவச்யம் ஸூசநம் செய்வதாகச் சொல்ல வேண்டும். குணமன்றியில் வில்லை இழுக்கவும், அம்பை எறியவும் ஸாத்யமாகா வென்றும், முண்டகம் குணமுள்ள ப்ரஹ்மத்திலேயே தாத்பர்யம் உள்ளதென்றும் இந்த ச்லோகத்தில் வேடிக்கையாகக் காட்டப் படுகிறது. 'ச்ருத்யாக்ருஷ்த' என்று வெகு அழகான ச்லேஷையால், காதுவரையிலும் உள்ள கயிறு இழுக்கப்படுகிறது என்பதும், ச்ருதி ப்ரமாணத்தால் நிரூபிக்கப்படுகிற குணங்களால் நாம் இழுக்கப்படுகிறோம் என்பதும் காட்டப்படுகின்றன. விக்ரஹம் ஸுலபமாக லக்ஷ்யமாகுமாதலால், அது இங்கு லக்ஷ்யமாகச் சொல்லப்பட்டது. ஸ்ரீமானான நாராயணன் அதாவது பத்மாகாந்தன் லக்ஷ்யமாவதாலும், லக்ஷ்மியானவள் மார்பிலிருப்பதாலும் இருவர்களையும் சேர்த்து ஒரே எறியால்



லக்ஷ்யமாக மார்பில் இலக்கு வைப்பது உசிதமாகும். வில்லாளிகளும் லக்ஷ்ய புருஷனுடைய மார்பில் இலக்கு வைப்பார்கள். உள்ளே இருக்கும் லக்ஷ்யத்தின் பேரில் உள்ளே இருக்கும் ஆத்மா என்னும் அம்பைத்தான் எறியவேண்டும். ஆத்மா என்னும் பாணம் எப்பொழுதும் மணிவரமாகத் திருமார்பில் இருக்கவேண்டியது ந்யாயமானபடியாலும், இந்தப் பாணத்தைத் திருமார்பில் எறிய வேண்டியது ந்யாயம். லக்ஷ்யத்தில் விழும் பாணம் அத்தோடு தந்மயமாகி, அதைவிட்டுப் பிரிக்கக்கூடாமல் ஒன்றாக இருக்கும். வில்லாளிகளும் வேடுவர்களும் பாணம் எறிவது போல் அன்புடையார் எறியக் கூடுமோ வென்றால், இவர்கள் தம்மையே பாணம்போல் எறிகிறார்களே ஒழிய சஸ்த்ரத்தை எறியவில்லை. தான் என்பதும் அதிஸூக்ஷ்மமான ஜ்ஞாந வஸ்து. ஜ்ஞாநத்ரவ்யம் ஆநந்த ஸ்வபாவமுடையது. லக்ஷ்யமும் ஜ்ஞாநம், அம்பும் ஜ்ஞாநம். இந்த அம்பினால் எப்படி நோவுண்டாகும்? இந்த அம்பு எப்போது தைக்கப்போகிறதென்று அவஸரத்தை எதிர்பார்த்துக் கொண்டே இருக்கிறது லக்ஷ்யம். அம்பு அதிவேகமாக ஒரு க்ஷணகாலத்தில் பாயும். அப்படியே ப்ரபத்தியும் ஒரு க்ஷணத்தில் பாயும். அவ்வாறு பாய்ந்து அது பலத்தைக் கொடுக்கிறது என்று ஸூசிக்கப்படுகிறது. சூரர்கள் குண்டுக் காயத்தை ஆபரணமாகக் காட்டுவது போல், தன் மார்பில் தைத்த இந்த அம்பை அவன் ஆபரணமாகக் கொண்டு, அதனால், தான் விளங்குவதாகக் காட்டுகிறான் என்றும் இந்த உபமையின் பாவம். முன் ச்லோகத்தில் அஸ்த்ர விபூஷணங்களாகிய தத்வங்களால் விளங்குகிறானென்று பொதுவாகச் சொன்னது, இங்கே மணிவரமான புருஷனை மார்பில் அணிந்து விளங்குவதாக விசேஷமாகக் காட்டப்படுகின்றது. முன் ச்லோகத்தில் சித் தத்வம் ஒன்றும் அசித் தத்வம் இருபத்தி நான்கும் அஸ்த்ர பூஷணங்களாகச் சொல்லப்பட்டன. அஸ்த்ரங்கள் வேறு, பூஷணங்கள் வேறு. இங்கே சித்தத்வம் அஸ்த்ரமாக எறியப்பட்டாலும் அதுவே பூஷணமாகிறதென்று வேடிக்கையாய் காட்டப்படுகிறது. முன் ச்லோகத்தில் பஹுவசநத்தால் முமுக்ஷுக்களான சித்தத்வங்களையே வாங்கிக்கொண்டு, அவைகள் முதலில் அஸ்த்ரமாக எறியப்பட்டு, பூஷணமாகி, நித்யமாக சோபையைக் கொடுக்கிறது என்று இந்த ச்லோகத்தால் ஸமர்த்தநம் செய்வதாகவும் சொல்லலாம். உயிர் பரம சரீரியான பரமாத்மா. எல்லா உயிரெழுத்துக்களுக்கும் மூலமான அகாரம் அவனைச் சொல்லும். மற்ற தத்வங்கள் மெய்யெழுத்துக்கள். அந்த இருபத்தைந்து எழுத்துக்களும் உயிரை ஆச்ரயிக்காமல் தாமாக நிற்கமாட்டா. மெய்யென்று தத்வங்களுக்குப் பெயர். மெய் மெய்யாவது உயிருடன் சேர்ந்திருப்பதால். மெய்யென்பதற்கு ப்ராப்யமான தத்வ சப்தத்தால் இதுவும் ஒரு ப்ரகாரமாய் ஸூசிதம். அம்புக்குச் சிறகு இருப்

பதுபோல் கௌஸ்துபத்துக்கு ப்ரபை இருக்கிறது. ஈச்வரனுடைய தலைக்கு நாம் லக்ஷ்யமென்று பின்னுல் சொல்லப்படுகிறது. "திவ்யமர்த்தம் வாஸுதேவஸ்ய பஞ்சாயுதஸ்ய ந விக்ஷதே" என்பதால், இதை அறிய லாகும்.

'க்ஷூடிஷேகாவலி' என்று பாகவதர்களுடைய கட்டளையினுல் தான் உளனுனதாக ஸூசிப்பிக்கப்படுகிறது. 'நீராஜிதம்' என்கிற பத ப்ரயோகத்தால் நாடக ஆரம்பத்தில் ஆரத்தி எடுக்கிற மங்களமானது ஸூசிக்கப் படுகின்றது. 'உத்கீ வர்த்தா வர்த்தனி' என்பதற்கு நாம், பக்தியால் மோக்ஷத்திற்குக் கண்டாம்சரான ஆசார்யர் காட்டிய வழி என்று பொருள் கொள்ள லாம். இந்த ஆரத்தியில் அக்கியின் புகை கிடையாது; ரத்ந காந்தியால் ஆன ஆரத்தி இது. இந்த ஆரத்தி கையால் எடுப்பதல்ல; தலையால் எடுப்பது. முத்தாரத்தி என்று ஒன்று உண்டு; இது ரத்நாரத்தி. 'க்ஷூடிஷேகாவலி' என்று ஸத்வித்யா ப்ரஸித்தமான ஆதேச சப்தத்தினுல் உபக்ரமித்ததினுல், இந்த நாடகம் ஒருவருக்குத் தெரிந்தால், தெரியாதது முழுதும் தெரிந்து விடும் என்று வ்யஞ்ஜிக்கப்படுகிறது. "நாடகே பணவிசூதே" என்று பிந்தித் தாமே அருளிச்செய்கிறுர் ஸ்ரீ தேசிகன். "தேவாநாமிதமாமநந்தி" என்கிற காளிதாஸ ச்லோகத்தால் யஜ்ஞ ஸமாப்தியில் நாடகம் ஆடித் தேவர்களை ஸந்தோஷிப்பிப்பது வழக்கம் என்று தெரிகிறது. இங்கு 'தீக்ஷிதஸ்ய' என்பது யஜ்ஞ ஸூசகம். உத்ஸவம் யஜ்ஞும். அங்கே வந்திருக்கும் பூமி தேவர்கள் இந்த அத்யாத்ம நாடகத்தால் ஆராதிக்கப்படுகிறுர்கள். அவர்களுக்குத் தேவத்வ ஸித்திக்காக சேஷசேஷாசநாதிக ரென்று சொல்லுவது. 'பரித்ராண' என்று விபவாவதாரத்துக்கு ப்ரயோஜநமான ஸாது பரித்ராணம் அர்ச்சைக்கு ப்ரயோஜநமென ஸூசிக்கிறது. 'ஸம்ஸவ ஸம்பந்நயோ:' என்று நித்ய ஸூரிகள் விஷயமான "நித்யநிஷேவாஷ ஸம்பந்நா:" என்னும் ஸ்தோத்ர ரத்ந பத ஸூசகம். ஸம்ஸ்ருதியை சர்வரீயாக ரூபித்தது முன்பு. இரவில் காட்டுத்தீ நன்றுய்த் தெரியும். ஸம்ஸாரம் மருகாந்தாரம். அது இரவு. ஸம்ஸார இரவில் ஸம்ஸார காந்தாரம் மண்டி எரிகிறது. இந்த ஸம்ஸ்ருதியாகிய கதாகதம் "உபயோ ரபி ஜந்தோ:" என்று சுழன்று வந்துகொண்டிருக்கும் ஜநந மரணங்களுக்கு மத்தியில் பெருந் தீப்பற்றி எரியும் ஸம்ஸாரக் காட்டில் அதை அணைக்கும் ப்ரஹ்ம காளமேக மிது. "அடவீஸம்ஸவசுவாலப்ரவாஹமயந்தீ" என்பது போல் இங்கே பாவம். எந்த ராஜாவின் ஸபையில் இந்த நாடகமென்றுல் ஸர்வேச்வரனுடைய ஸபையில் என்று பதில். இந்த ஸப்யர்களின்



ஸம்ஸ்ருதி ரூபமான கதா கதங்கள் யாத்ரோத்ஸவ கதா கதங்கள் என்று 'மதாமத' சப்தத்தால் ஸூசகம். 'ஆஜிஜநவிது:' என்று அந்தப் பதங்களைக் கொண்டு ஆரம்பித்து, ஆசார்ய லக்ஷணம் சொல்லும் ஸூத்ரத்துக்கு ஸ்மாரணம் குரு ஸமமான பெரியோர்கள் நியமநம்.

(தொடரும்).

ஸ்ரீ:

॥ ஸ்ரீவாதநகேஸரீ ராமாநுஜாயநம: ॥

# வடிவழகிய நம்பியின் வைபவ விசேஷம்.

(விழுப்புரம் தாலூகா—ஆரியூர். ஆ. வ. பத்மநாப ராமாநுஜ தாஸன்.)

ஸ்ரீமத்வைத காமஹாமதநாத நமதே திஷ்டஸ்துதா ஸந்த
ஞாஸீநஸ்ய யாராயரா ப்ரதிவாத தேவஸ்ய வரணாயாஸ்து: ।
தாஸ்ரயாஸ்த்ர நதிர தாயிகாமஜநவார ஸ்திம்யம் விநாதம் உக்கி
வர்த்தம் வணமரமாவதகம் பிவஜமதராக்ஷாத்ரதஃ வ்ராஸ்ரபவ: ॥

திருமாமகளார் தனிக்கேள்வனுய், உயர்வற உயர்ந்த உயர்நலம் உடையவனுய், இன்பம் பயக்க இனிதுடன் வீற்றிருந்து ஏழுலகை ஆள்கின்ற உலகுக்கோர் தனியப் பனுய், அந்தமில் பேரின்பத்துப் பெருவீட்டில் எழுந்தருளியிருக்கும் அடியவர்க் கெளியவனுன பரமபதநாதன் "சென்றுற் குடையாம் இருந்தாற் சிங்காதனமாம், நின்றுல் மரவடியாம் நீள்கடலுள்—என்றும், புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும் அணையாம், திருமாற்கு அரவு" என்றபடியே, எவ்வேளையிலும் பிரிந்திடாது மிருதுமிக்க சரீரத்தைக் கொண்டு தனக்கு ஊழியம் செய்துவரும் யாதொரு பலாபேட்சையுங் கருதாத திருவனந்தாழ்வானிடம் எவ்வாறு தனது க்ருதஜ்ஞதையை வெளியிடுவது என்று ஆலோசிக்கலானுன். துஷ்ட நிக்ரஹ சிஷ்டபரிபாலனுர்த்தம் சக்ரவர்த்தித் திருமகனுக தனது பரம க்ருபையாலே பூலோகத்தில் அவதரித் தருளியபோது, அனந்தாழ்வானை இளைய பெருமாளாகப் பிறப்பித்து, இளங்கோவுக் குரிய இன்பங்களை நுகர்விக்கத் திருவுள்ளம் பற்றினுன். ஆனுல், அந்நோக்கத்துக்கு நேர்மாருக, கானகமேக இளங்கோ கட்டளையிடப்படாவிடத்தும், தன்னைத் தொடர்ந்து பதினுன்கு ஆண்டுகள் தன்னை

விட்டுப் பிரியாது, தனக்குப் பணிசெய்து கிடப்பதிலேயே நம்பி பொழுது போக்கி யிருந்து விட்டதனால், எம்பெருமான் தனது நோக்கம் நிறைவேறக் கண்டானில்லை க்ருஷ்ணாவதார காலத்தில் அனந்தனை அண்ணனாகப் பலராம னாகப் பிறப்பித்த விடத்தும், "கண்ணன் உன் அடைக்கலம்" என யசோ தைப் பிராட்டியால் தான் அவன்பால் ஒப்புவிக்கப்பட்ட படியால், தன்னைத் தேடித் திரிவதும் தொடர்ந்து வருவதுமே அனந்தன் வேலைகளாகி விட்ட மையால் அக்காலத்தும் தனது நோக்கம் நிறைவேறக் கண்டானில்லை.

அவ்வாறு கடந்த இருயுகங்களிலும் தனது நோக்கம் நிறைவேறா தொழிந்தமை கண்ட பரமபத நாதன், கலியுகத்தில் அனந்தாழ்வானை இராமா நுசர் என்னும் உடையவராகப் பிறப்பித்து, தான் அர்ச்சாவதாரத் திருமேனி கொண்டு, திவ்ய தேசங்களில் எழுந்தருளி யிருந்து, தனது க்ருதஜ்ஞதையை வெளியிடும் சமயத்தை எதிர்பார்த்துக்கொண் டிருந்தான். அவ்வளவில் எம்பெருமானார், தமது சிஷ்ய வர்க்கங்களுடன் திக்விஜயம் செய்து, பரமத கண்டனம் புரிந்து விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தைப் பரப்பிக்கொண்டு வரும் போது, மலைநாட்டிற்கு எழுந்தருளினார். அந்நாட்டிலுள்ள அநந்தசயனம் தொடக்கமான திவ்ய தேசங்களி லிருப்போர், தமது ஸித்தாந்தத்திற்கு முற் றும் முரண்படும் ஆசார அநுஷ்டானங்களை உடையவர்களாக இருத்தல் கண்ட உடையவர், அவர்களைத் திருத்தி உய்விக்கத் திருவுள்ளம் பற்றியவ ராய்த் திருவநந்த புரத்தில் தங்கி யிருந்தார். தாம் வாழும் நாட்டில் பகவத் ராமாநுஜ ஸித்தாந்தம் பரவுமாயின், மலைநாட்டினர் அச்சித்தாந்தத்தை அவலம்பிக்கத் தகுதியற்றவர்க ளாதலின், அச்சித்தாந்தத்திற்கே குறைவு நேரக்கூடு மென்று திருவுள்ளம் பற்றிய அனந்த பத்மநாபன், தன்னை ஸேவி த்து நிற்கும் பெரிய திருவடியை நோக்கி, 'இவ்விரவே இராமாநுசனைச் சித் தாச்ரமத்திற் கொண்டு சேர்ப்பித்து வருக' என்று ஆஜ்ஞையிடலும், அவரும் அவ்வாறே செய்தார்.

'சித்தாச்ரமம்' என்று சிறப்பித்துச் சொல்லப்படுவதே திருக்குறுங் குடி' என்னும் திவ்ய தேசமாகும். "सह्यदक्षिणदिग्भागे महेन्द्रस्योत्तरे तथा । तत्र क्षीरनदी वर्ण्या दक्षिणे सागरं गता ॥ तत्र सिद्धाश्रमे ह्यस्मिन् अंशावतारः कृतनिश्चयः । धर्मराजात्मजेनात्र हस्ताभ्यां व्यवस्थितः ॥" எனக் கைசிக புராணத்திற் கூறப்பட்டபடியே, இப்புண்ய பூமியின் தென்பாகத்தில் ப்ரஸித்தமாய் விளங்கும் மஹேந்த்ர பர்வதத்தருகில் 'க்ஷீரநதி' எனும் அழகிய ஆற்றின் கரையில் 'ஸித்தாச்ர மம்' எனும் திருக்குறுங்குடி விளங்குகின்றது. குறுகியவனான வாமனன் எழுந்தருளியிருக்கு மிடமாதல் பற்றி, அத்தலம் 'திருக்குறுங்குடி' என்று அழைக்கப்படுவதாயிற்று. அத்தகைய அத்திவ்ய தேசத்தில், திருப்பாற்



கடல் நதிக்கரையி லுள்ளதொரு கற்பாறையில் விழித்தெழுந்த உடையவர் மிக்க வியப்புற்று, அனந்த பத்மநாபனின் திருவுள்ளத்தை அறிந்து அகந் தேறி, தன்னுடன் வந்திருந்த வடுகநம்பியை 'நம்பீ! நம்பீ!' என்று பெயர் கூறாது பொதுப்பட விளித்தார். அதுவே தக்க சமயம் என்று அகமகிழ்ந்து, நெடுநாட்களாகக் காத்திருந்த திருக்குறுங்குடி எம்பெருமானான வடிவழகிய நம்பியும் வடுகநம்பியேபோல் வடிவெடுத்துச் சென்று, 'அடியேன்' எனக் கைகட்டி நின்றார். பின்னர், உடையவர் நீராடிக் களைந்த உத்தரீயங்களை, நம் பியும் தமது திருக்கரங்களால் துவைத்து அப்பாறைமீது உலர்த்துவதா னார். அன்றுதொட்டு இன்றுவரை, அப்பாறையும் "திருப்பரிவட்டப் பாறை" என வழங்கப்பட்டு வருகின்றது.

எம்பெருமானாரும் திருமண்காப்பு அணிந்துகொள்ளத் தொடங்கு முன், நம்பியும் "தேவரீர் திருமண் காப்பு அணிந்துகொண் டருளியபின், அடியேற்கு மிகுந்ததைக் கொண்டு தேவரீரது திருக்கரத்தினாலேயே திரு மண்காப்பு இடப்பெறும் பேறு பெறுதல் வேண்டுமென்று நெடுநாட் களாக அடியேன் விருப்பி வந்ததுண்டு; தேவரீரும் அடியேனும் மட்டும் ஏகாந்தமாக உரையாடும் பாக்கியம் இதுகாறும் வாய்க்காமையால் அதனை விண்ணப்பித்துக்கொள்வதற் கில்லாது போயிற்று. அப்பேறு வாய்த்துள்ள இவ்வேளையில், அடியேனது அபீஷ்டத்தை நிறைவேற்றி வைத்தருள வேண்டும்" என்று பிரார்த்தித்து நின்றார். உடையவரும் அவ்வண்ணமே தமது திருக்கையினாலேயே நம்பிக்கு ஊர்த்துவ புண்ட்ரம் சாற்றியருளினார். பின்னர் நம்பியும், 'உலகினரைத் திருத்தி நல்வழிப் படுத்தி உய்விக்கும் உபாயம் யாது?' என்று உடையவரை நோக்கி உசாவி னார். எம்பெருமானாரும் தாம் ஆசார்ய பீடத்தமர்ந்து, நம்பியைச் சிஷ்ய ஸ்தானத்தில் இருத்தி, 'அவ்வுபாயம் இருக்கும்படி இதுகாண்' என்று மந்த்ரார்த்த விசேஷங்களை உபதேசித்து, 'ஸ்ரீ வைஷ்ணவ நம்பி' எனும் தாஸ்ய நாமமும் அளித்தருளினார். பின்னர், நம்பிகள் தம்மைத் தொடர்ந்து பின்னேவர, தாம் முன்னாகத் திருக்குறுங்குடி நம்பி ஸந்நிதியை நோக்கிச் சென்றார் ஸ்ரீபாஷ்யகாரர். ஆலய மடைந்து திருவாசல் கண்டதும், எட் டுறுப்புக்களும் நிலத்திற்பட நெடிது வீழ்ந்து வணங்கி யெழுந்த உடையவர், தம் பின் வந்துகொண்டிருந்த நம்பிகளைக் காணப் பெற்றாரில்லை. அவர் காணப் படாதது பற்றிப் பெருவியப்புற்று, உட்சென்று பெருமாளைச் சேவித்த பொழுது, தமது திருக்கையால் சாற்றப்பட்ட திருமண்காப்பு ஒளிரும் திரு நெற்றியுடன் வடிவழகிய நம்பி ஸேவை ஸாதித்தல் கண்ட உடையவர், நம்பிகளை 'உடல் குழைய, என்பெலாம் நெக்குருக, விழிநீர்கள் ஊற்றென வெதும்பி யூற்ற'ச் சேவித்து, பரமானந்த பரிதரானா ரென்பதைப் பகரவும் வேண்டுமோ? அத்திவ்ய தேசத்தில், ஆண்டுதோறும் ஆனித் திங்களில்

ஒரு நாளில் அந்நாள் தொட்டு இக்காலம் வரை, வடிவழகிய நம்பி அத்திருப் பரிவட்டப் பாறையின்மீது அமைந்துள்ள உடையவர் ஸந்நிதிக் கெழுந்தருளி, அவ்வைபவ விசேஷத்தைக் குறிப்பிடும் திவ்யோத்ஸவம் கண்டருளி வருகின்றார். மற்றும், ஏனைய திவ்ய தேசங்களில் எழுந்தருளப் பண்ணப் பட்டுள்ள உடையவர் விக்ரஹங்கள் அனைத்தும் அஞ்சலி ஹஸ்தங்களுடன் விளங்குவனபோலத் திருக்குறுங்குடியில் அமைந்திலது. அவ்வைபவ விசேஷத்தைக் குறிக்கவே போலும், அத்திவ்ய தேசமொன்றில் மட்டும் உபதேச க்ரமத்தோடு கூடியதாக உடையவர் விக்ரஹம் அமைந்து விளங்குகின்றது. இவ்வாறு, இராம கிருஷ்ணாவதாரங்களில் நிறைவேறு தொழிந்த தனது மனக் குறையை, இக் கலியுகத்தில் அர்ச்சாவதாரத்தில் எம்பெருமான் இனிது நிறைவேற்றிக்கொண்டான்.

இவ்வாறு, நூற்றெட்டுத் திவ்ய தேசத் தெம்பெருமான்களுள் திருக்குறுங்குடி நம்பி ஒருவரே பகவத்ராமாநுஜ ஸம்பந்தம் பெற்று, ஸ்ரீவைஷ்ணவத்வம் படைத்தவரானார். 'கலியும் கெடும் கண்டு கொள்மின்!' என்று உடையவர் திருவவதாரத்தைப் பல்லாண்டுகட்கு முன்னரே ஸ்ரீமந் நாதமுனிகளுக்குச் சூசிப்பித்த நம்மாழ்வாரே, மேற்கண்ட வைபவ விசேஷம் நடைபெறப் போவதையும், பல வருடங்கட்கு முன்னரே குறிப்பித்தருளுபவரே போல், ஏனைய தொண்ணூற்றொன்பது திருவாய்மொழிகளிலும் குறிப்பிடாவண்ணம், திருக்குறுங்குடியைப் பற்றிய மங்களாசாஸனத் திருவாய்மொழியில் மட்டும், அப்பத்துப் பாக்களையும்* 'அறியக் கற்றுவல்லாரே ஸ்ரீவைஷ்ணவராவர்' என்று அறுதியிட்டருளியிருப்பது பெரிதும் வியக்கத்தக்க தொன்றாகும். மேலும், தான் நழுவிக்கொள்ளப் பார்ப்பினும், நம்பி தன்னைவிடாது பற்றிக் கொள்வதை, "செல்வன் நாரணன் என்ற சொற் கேட்டலும், மல்குங் கண்பனி நாடுவன் மாயமே, அல்லும் நன்பகலும் இடைவீடின்றி, நல்கி என்னை விடான் நம்பி நம்பியே!" என்று வியந்து பாடுகின்றார் ஆழ்வார்.

நம்பியின் விஷயமாக அமைந்த "எங்ஙனேயோ அன்னைமீர்காள்!" எனுந் தொடக்கத்து மங்களாசாஸனப் பாசுரங்கள் பத்தும் 'உருவெளிப்பாடு கண்ட தலைவி தாயை மறுத்துரைக்கும்' துறையில் அமைந்துள. திருக்குறுங்குடி நம்பியின் திவ்யாவயவ ஸௌந்தர்ய விசேஷங்கள், ஆழ்வாரது உள்ளத்தைக் கொள்ளை கொள்வனவாகி, நோக்குமிடமெங்கணும் தோன்று

* அறிவரிய பிரானை ஆழியங் கையனையே யலற்றி
நறியநன் மலர்நாடி நன்குருகூர்ச் சடகோபன் சொன்ன
குறிகொளாயிரத்துள் இவைபத்தும் திருக்குறுங்குடியதன்மேல்
அறியக் கற்றுவல்லார் வைட்டணவர் ஆழ்கடல் ஞாலத்துள்ளே."



கின்றன. நம்பியின் 'வென்றி வில்லும் தண்டும் வாளும் சக்கரமும் சங்கமும்', 'பூந்தண்மாலைத் தண்டுழாயும் பொன்முடியும்', 'தொக்கசோதித் தொண்டைவாயும் நீண்ட புருவங்களும் தக்கதாமரைக் கண்ணும்', 'நிறைந்த சோதி வெள்ளம் சூழ்ந்த நீண்டபொன் மேனியொடும்' ஆழ்வார்முன் நின்று தோன்றிக் கண்ணுள்ளும் நெஞ்சுள்ளும் நீங்காது நிலவுவவாயின. நம்பியின் ஒப்புயர்வற்ற வடிவழகில் ஈடுபட்ட வகுளாபரண நாயகி, 'நீங்கநில்லாக் கண்ணநீரொடு, தலைவன் நின்றிடும் திசை நோக்கியும் கைதொழுவள் ஆயினள். 'தேவர் குழாங்கள் கைதொழச் சோதி வெள்ளத்தினுள்ளே எழுவதோருரு' வுடைய வடிவழகிய நம்பியின் வைபவ விசேஷங்களில், ஒன்றேனும் அபிமான விசேஷத்தால் ஏற்றிச் சொல்லப்பட்டதன்று என்பதை வலியுறுத்தவே, நம்பியின் கீர்த்தியைத் 'தக்க கீர்த்தி' என்றும், 'சிறந்த கீர்த்தி' என்றும், 'வழுவில் கீர்த்தி' என்றும் நாவீறுடையபிரான் சிறப்பித்து நவில்வாராயினர். இனி, மாறன் அருளிய தமிழ்மறைக்கு ஆறங்கம் கூற அவதரித்த கலிகன்றி, நம்பி பக்கலில் ஈடுபட்டிருப்பதுபற்றிச் சற்றுக் கவனிப்போம்.

தனது தலைமகனுள்ள விடத்தில் தன்னைக் கொண்டு விடும்படி தலைவி உற்றாரை வேண்டிக் கூறுந் துறையில், 'தவள விளம்பிறை' எனுந் தொடக்கத்துத் திருமொழி பத்துப் பாக்களும் அமைந்துள. நம்பியின் வடிவழகு, பராங்குச நாயகியின் கண்ணுள் நீங்காது நெஞ்சுள்ளும் நீங்காது நிறைந்ததேபோல், பரகால நாயகியின் கண்ணகத்தும் மனத்தும் அகலாது நிற்பதாயிற்று. 'நிறைந்தவன் பழி நங்குடிக்கு இவளென்று' பராங்குச நாயகியை அன்னையர் முனிந்ததேபோல், பரகால நாயகியையும் ஏந்திழையார் பலரும் பலவாறு ஏசுவாராயினர். ஆயின், அது குறித்துப் பரகாலநாயகி அஞ்சிப் பின்னிடுவளோ? அந்நாயகி "உறங்கும் பேதையர் பேதைமையால் இருந்து பேசிலும் பேசுக; அவர் நல்லரோ அல்லரோ; அவர்திறம் நாம் அறியோம்; நாண்மடம் அச்சம் நமக்கு இங்கில்லை; (ஏந்திழையார்) வல்லன சொல்லி மகிழ்வரேலும், மாமணி வண்ணனை நாம் மறவோம்" என்று தனது தணிப்பருங் காதலின் தளரா உறுதியை வெளியிடுவது போற்றற்குரியது. மல்லிகை புல்லி வந்த இளவாடையும், தென்றலோடு 'கொண்டதோர் மாலை'யும், 'அந்தியீன்ற கோல இளம்பிறை'யும் பிறவும் தலைவன் அண்மையி லில்லாவிடத்து அந்நாயகிக்குப் பெருந்துயரே விளைப்பன ஆகின்றன.

திருக்குறுங்குடி இயற்கை யழகு மிகப் பெரிதும் வாய்ந்ததொரு சிந்தைக் கினிய சிறந்த இடமாகும். மேகவரிசைகள் தோய்ந்து செல்லும் மஹேந்த்ர பர்வதத்தின் இனிய காட்சியும்; நோக்குமிடமெங்

கணும் பச்சைப் பசேலெனத் தழைத்து வளர்ந்த செழுமை மிக்க பல்வகை மரங்களையுடைய 'தேம்கொள் சோலை'களிலிருந்து எப்பொழுதும் மெல்லென வீசிக்கொண்டிருக்கும் இளங்காற்றின் இனிமையும்; ஆலயத்தை அடுத்துச் சிலுசிலென ஓடிக்கொண்டிருக்கும் தெளிவு மிக்க திருப்பாற்கடலாற்றின் அழகும்; இயற்கை வனப்பு மிக்க காட்சிகள் பிறவும் அன்பர் அகத்தை ஆனந்தக்கடலுள் ஆழ்த்துவனவாம். ஊரிலிருந்து ஐந்து மைல் தூரத்திலுள்ள மலைமேல் நம்பி ஸந்நிதிக்குச் சோலைகளினூடே செல்லும் வழியில், க்ஷீரநதிப் பாதையை யடுத்துப் பாறைகளின்மீது பாய்ந்தோடிக்கொண்டிருக்கும் அழகும்; மலைநம்பி ஸந்நிதிக்கருகில் மிக்க உயரத்திலிருந்து வேகமாக வீழும் நீர்வீழ்ச்சியின் அற்புதக் காட்சியும்; பாதையோரத்தில் படர்ந்து கிடக்கும் 'கொல்லை முல்லை மெல்லரும்பீனும்' கோலமும்; 'என்று மிரவும் பகலும் வரிவண்டிசை பாடக் குன்றின் முல்லை மன்றிடை நாறும்' இன்பமும் பிறவும் கேவலம் எழுத்துக்களால் வருணித் தெழுதிக்காட்டக் கூடியனவல்ல. அவற்றை நேரில் சென்று காண்போர்க்கே திருக்குறுங்குடியின் சிறப்பு தெரியவரும்.

திருவரங்கம் பெரிய கோயிலில் கைங்கர்யங்கள் பலவற்றைச் செய்து கொண்டிருந்து அழகிய மணவாளனை உகப்பித்த ஆலிநாடர் தமக்குப் பெரிய வீடளித்தருளுமாறு பெரிய பெருமாளைப் பிரார்த்தித்து நிற்க, பெருமாளும் 'நமது தெற்கு வீட்டிற்குச் செல்லக்கடவாய்; அங்கு அநுக்ரஹிப்போம்' என்று பணித்தருள, ஆழ்வாரும் அவ்வாறே தெற்கு வீடாய திருக்குறுங்குடியை அடைந்து, நம்பியைச் சேவித்து இன்புற்று, அத்திவ்ய தேசத்திலேயே திருமேனி நீத்துப் பெரிய வீடு பெற்றாரென்பது ப்ரஸித்தம். திவ்யதேசத் தெம்பெருமான்களுள் மிகப் பலரை மங்களாசாஸனம் செய்த மங்கை மன்னர், இறுதியில் திருக்குறுங்குடியையே அடைந்து பெரிய வீடு பெற்றது குறிப்பிடத்தக்கதாகும். இதனையே, திருக்குறுங்குடியைப்பற்றிப் பாடும்போது, 'வாழக் கண்டோம் வந்து காண்மின் தொண்டீர்காள்!' என்று கலிகன்றி குறிப்பிட்டருளினர்போலும். ஆழ்வார் திருமேனி நீத்த இடத்திலே அவரது திவ்யமங்கள விக்ரஹம் எழுந்தருளச் செய்யப்பட்டிருப்பதுடன், கொல்லையிடையே உள்ள அவ்விடத்தில் தினந்தோறும் திருவாராதனமும் நடத்தப்பட்டு வருகின்றது.

'எவர் சிரத்திற் கரம் வைப்பினும், அவர் தீப்பற்றி எரிந்து படுவாராக' என்று ஆலோசியாது பத்மாசுரனுக்கு வரந் தந்த சங்கரன், அவ்வரத்தைச் சோதித்துப் பார்க்க அவ்வரக்கன் தன்னையே நாடிவருதல் கண்டுப் பெரிதும் அஞ்சி, தனது பேதைமையை நினைந்து நொந்து, வடிவழகிய நம்பி



பக்கல் வந்தடைந்து சரணம் புகுதலும், நம்பியும் "அஞ்சேல்! என்பக்கல் அமர்ந்திடுக; குறை தவிர்ப்போம்." என்று கூறி யருளினர்.

அன்று தொட்டு இன்றளவும், நம்பியின் திவ்ய ஸந்நிதியினுள் (நின்ற நம்பி கிடந்த நம்பி ஸந்நிதிகட் கிடையில்) 'பக்கம் நின்றார்' என்ற பெயருடன், இலிங்கத் திருவுருவுடன் சங்கரன் அமர்ந்து விளங்குவதும், பெருமாளுக்கு நடைபெறுவதுபோல் ஆராதனம் முதலியவற்றில் எவ்வகைக் குறைவுமின்றி அவருக்கும் நடைபெற்று வருவதும் வியக்கத்தக்கனவாம். விசேஷ தினங்களிற் பெருமாள் புறப்பட்டருளி உட்பிரதக்ஷிணமாக எழுந்தருளும் போதெல்லாம் அச் சங்கரன் ஸந்நிதி யருகில் நின்று, "நம் பக்கல் நின்ற சிவனுக்கு ஓரொன்றுற் குறையுண்டோ?" என்று அர்ச்சக வாயிலாக வினவியருள, அச் சிவன் கோயிற் குருக்களும் 'ஓரொன்றுற் குறையில்லை' என விடையிறுத்த பின்னர்ப் பெருமாள் உள் எழுந்தருளுவராம். இதனைக் குறிக்கவே கொற்றவேற் பரகாலரும்

"அக்கும் புலியி னதளும் உடையாரவரொருவர்
பக்கம் நிற்க நின்ற பண்பரூர் போலும்!
தக்க மரத்தின் தாழ்சினையேறித் தாய்வாயில்
கொக்கின் பிள்ளை வெள்ளிற வுண்ணும் குறுங்குடியே"

என்று பாடியிருத்தல் காண்க.

திருக்குறுங்குடியில், எம்பெருமான் ஐந்து திருக்கோலங்களோடு ஸேவை ஸாதிக்கின்றான். பெரிய ஸந்நிதியில் 'நின்ற நம்பி' யாகவும்; அதன் பக்கத்திலுள்ள இரண்டாவது ஸந்நிதியில் பரமபதத்தில் எழுந்தருளி யிருப்பதேபோல் ஸ்ரீ பூ தேவிகளுடன் வீற்றிருக்கும் 'இருந்த நம்பி' யாகவும்; அதனை அடுத்துள்ள மூன்றாவது ஸந்நிதியில் திருப்பாற்கடலில் எழுந்தருளி யிருப்பதே போல் 'கிடந்த நம்பி'யாகவும்; திருப்பாற்கடல் நதிக் கரையில், மாவலிபால் மூவடிமண் இரந்து பெற்ற வாமன அவதாரத்தோடு 'திருப்பாற்கடல் நம்பி'யாகவும்; மலையின்மேல், தேவர்கட்கு ஸேவைஸாதித்த அவதாரத்தோடு 'மலைமேல் நம்பி'யாகவும் எழுந்தருளியிருப்பது அன்பர்க்கு இன்பமூட்டுவதாகும்.

ஐந்தாங் குலத்திற் பிறந்தும், இழிதொழில்களை மேற்கொள்ளாது, நாடோறும் அதிகாலையில் விழித்தெழுந்து, நம்பி எழுந்தருளியிருக்கும் பக்கம் நோக்கிநின்று, நம்பியிடம் சிந்தையை நாட்டி, வீணையை மீட்டி. நாடோறும் மனமுருகப் பாடி மகிழும் நியமமுடையவனாயிருந்த நம்பாடுவான் என்பானொருவன், கார்த்திகை மாதத்துச் சுக்லபட்சத் துவாதசியன்று, வழக்

கம் போலத் திருக்குறுங்குடியை நாடி வந்துகொண்டிருந்தபோது, ப்ரஹ்ம ரக்ஷஸ் ஒன்று எதிர்ப்பட்டுத் தடை செய்ய, தனது நியமத்தை நிறைவேற்றிக் கொண்டபின் மீண்டுவந்து அதற்கு இரையாவதாகச் சபதங்கள் பல செய்துகொடுத்து, அதைக் கடந்து சென்று நம்பியைப் பாடி உகப்பித்து ப்ரஹ்ம ரக்ஷஸ்ஸிடம் அடைந்தான். அது கண்டு வியந்த அது, 'முற்பிறப்பில் மறையவனாய்ப் பிறந்து வேள்வி செய்ததில் ஏற்பட்ட சூலதோஷத்தினால், ப்ரஹ்மரக்ஷஸ்ஸாக திரிந்தலைவதாக'த் தெரிவித்து, நம்பாடுவானது பெருமையை உணர்ந்து தன்னை உத்தரிப்பிக்குமாறு அவனைச் சரணம் புகுந்தது. அவனும், அதன்மேற் கருணை கூர்ந்து,

« யந்மயா பஶ்சிமே யாமே கீதம் கைஶிகமுத்தமம் ।
ஃபலேந தஸ்ய பத்ரம் தே மோக்ஷயிஷ்யாமி கில்பிஷாத் ॥ »

[கடந்த இரவில் என்னால் பாடப்பட்ட பண்ணாகிய கைசிகம் என்ற கீத பலத்தினால், இந்த ராக்ஷஸ ஜன்மத்தினின்றும் விடுபட்டு மோக்ஷத்தை அடையக்கடவாய்] என்று நம்பாடுவானும் அபயப்ரதானம் பண்ணி அதனை நற்கதி பெறுவித்தான். இதன் விரிவைப் பூமிப்பிராட்டியாருக்கு வராஹ நயினார் அருளிச் செய்த கைசிகபுராணத்திற் காண்க. ஆண்டுதோறும் கார்த்திகை மாதத்துச் சுக்லபட்ச த்வாதசியன்று, அவ்வைபவத்தைக் குறிப்பிடும் திவ்யோத்ஸவம் திருக்குறுங்குடியில் அதிவிபவமாக நடைபெற்று வருகின்றது. நம்பாடுவானுக்கு நம்பியின் திவ்ய ஸேவை கிடைப்பதற்கென்றே நம்பி ஸந்நிதியிலுள்ள த்வஜஸ்தம்பம் பலிபீடத்திற்கு நேரே நடுவில் மறைத்துக்கொண்டிராமல் சற்று விலகி அமைந்துளது.

காரியும் உடைய நங்கையும் மகப்பேறு குறித்து நம்பியைப் பிரார்த்தித்து நின்றவளவில், 'நாமே உங்கட்குப் புதல்வனாக வந்து பிறக்கிறோம்' என்றருளிச் செய்து, நம்பியே நம்மாழ்வாராக அவதரித்தருளினன் என்றும் பெரியோர் சிலர் சொல்வதுண்டு. திருக்குருகூரில் திருப்புளியாழ்வாரடியில் எழுந்தருளியிருக்கும் நம்மாழ்வா(உத்ஸவ)ரது திருமுக மண்டல ஸேவைக்கும் வடிவழகிய நம்பியின் திருமுகமண்டல ஸேவைக்கும் யாதொரு வேற்றுமையும் காணக் கூடாதவாறு இரண்டும் ஒன்றேபோல் அமைந்து விளங்குவது அதிசயிக்கத்தக்க தொன்றேயாம்.

நம்பியின் ஸந்நிதி அதிபுராதன மானதாகும்; மேலும், அஃது மிக்க விஸ்தாரமாகவும் அமைந்துளது. அவ்வாலயத்தை நிர்வகித்துவரும் ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி திருக்குறுங்குடி ஜீயர் ஸ்வாமிகள், ஆலயத்தில் திருப்பணி நடத்திக்கொண்டு வருகின்றார்கள். ஸ்வாமிகளது கைங்கர்யம் பின்னும் பின்னும் பல்கிப் பெருகுமாறு நம்பி திருவருள் பொழிவானாக. மற்றும் அச் சன்னிதியின் கோபுரத்தின் முதல் நிலையில், பண்டைக் காலத்திய நமது செந்தமிழ் நாட்டுச் சிற்ப நிபுணர்களது சிற்பத் திறனின் சிறப்பை விளக்கிக் காட்டுவனவாக, மரத்திற் செதுக்கப்பட்டனவேபோல், கருங்கல்லிற் காண்போர்க்குப் பெருவியப் பூட்டுமாறு, போழகு வாய்ந்தனவாக வரிசை வரிசையாகச் செதுக்கப்பட்டுள்ள அற்புதச் சிற்பங்கள் பெரிதும் போற்றற் குரியனவாம். அத்தகைய அற்புதச் சிற்பவேலை வேறெச் சந்நிதியிலும் காணக் கிடைக்காத தொன்றே.



பகவத் ராமாநுஜ ஸம்பந்தம் பெற்ற ஸ்ரீவைஷ்ணவ ஸத்ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகர்காள்! அருளிச் செயல்களில் ஆழ்ந்த ஆர்வமுடைய ஆஸ்திகோத்தமர்காள்! இயற்கைப் பேரழகில் ஈடுபட்டுப் பேரின்பம் நுகரும் பேறிவாளர்காள்! இதுகாறும் உங்களில் எவரெவர் தானே சிஷ்யனுமாய்த் தானே ஆசார்யனுமாய் நரநாராயணர்களாயிருந்து, வதரியாச்ரமத்தில் தனக்குத் தானே மந்த்ரார்த்தத்தை வெளியிட்டுக்கொண்ட குறைதீர, அறிவுடைய மகன் கற்றவற்றை அன்புடைய தந்தை ஆர்வத்துடன் கேட்பதே போல், தான் சிஷ்யனாயிருந்து உடையவர் பக்கலில் உபதேசம் பெற்று, பகவத்ராமாநுஜ ஸம்பந்தம் பெற்று, ஸ்ரீவைஷ்ணவ நம்பியாகிய ஸ்ரீ ஸௌந்தர பரிபூர்ணப் பெருமாளை ஸேவிக்கும் பாக்யத்தையும் திருக்குறுங்குடியின் இயற்கைப் பேரழகின் இன்பத்தைச் சுவைக்கும் பேற்றையும் அடையவில்லையோ, அவரவர் கூடியவிரைவில் புறப்பட்டுச் சென்று அத் திவ்யதேசம் போந்து, நம்பியைச் சேவித்து, ஆழ்கடல் ஞாலத்துள் வைட்ணவர்:வீர்களாக. இதுகாறும் கூறிவந்த நம்பியின் வைபவ விசேஷங்கள், சில புராதன க்ரந்தங்களிற் கண்ட ஆதாரங்களைக் கொண்டு எழுதப்பட்டனவும், திருக்குறுங்குடியி லெழுந்தருளியுள்ள ஸ்வாமிகள் சிலர் பக்கலில் கேட்டறிந்தனவும், நேரில் சொந்த அனுபவ வாயிலாக அடியேன் அறிந்து ஆனந்தித்தனவுமாகும். எல்லாப் பிழைகளையும் ஆன்றோர் பொறுத்தருள்வாராக.

“நம்பியைத் தென் குறுங்குடி நின்ற அச்
செம்பொனே திகழும் திருமூர்த்தியை
உம்பர் வானவ ராதியஞ் சோதியை
எம்பிரானை என் சொல்லி மறப்பனோ!”

॥ ஸ்ரீ: ॥

# ஸ்த்ரீகளுடைய ஸ்வாதந்த்ர்யமும் அவர்களின் சட்ட ஸபா ப்ரவேசமும்.*

(ஸ்ரீ. உப. வித்வான் த. வெ. ஸ்ரீநிவாஸாசார்யர், ந்ருஸிம்ஹபவநம், திருச்சி.)

ஆறு குணங்களால் அலங்கரிக்கப்பட்டவனும், ஸத்ய ஸங்கல்பனும், எங்கும் வ்யாபித்திருப்பவனுமான பரம புருஷன் பரம கருணாநிதியாக இருப்பதால், ப்ரளய ஸமயத்தில் கரண களேபரங்களை இழந்து, ஜ்ஞாந ஸங்கோசத்தை அடைந்து, அசேதந ப்ராயங்களாக உறை மெழுக்கில் அமிழ்ந்திருக்கிற பொன் துணுக்குப்போல் ப்ரக்ருதியில் ஒடுங்கியிருக்கிற ஜீவராசிகளைக் கண்ணுற்று, அவைகளுக்குப் போக மோக்ஷ ஸாதநங்களான கர்மாக்களை அநுஷ்டிப்பதற்கு ஸாதநங்களான கரண களேபரங்களைக் கொடுத்து லீலா விபூதியை வ்ருத்தியடையச் செய்கிறான். இதனால் ஜகத் ஸ்ருஷ்டி கருணா கார்யமென்றே நன்கு புலப்படுகிறது. 'ஸுஹித விஷயிஷாநு ஸ்ப்ருஹை ஜநஸ்ய தநுகரணஜாதநிர்வேதுஷா । கரணகளேபரயோகம் விதரஸி வ்ருஷசைலநாத கருணே த்வம்' என்கிற ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகனுடைய திவ்ய ஸூக்தி இந்த விஷயத்தில் ப்ரமாணம்.

பரம புருஷன் இவ்வாறாக நிர்வ்யாஜ கருணையினால் ஜீவ வர்க்கங்களை ரக்ஷிக்க வேண்டுமென்றே 'பஹு ஸ்யாம் ப்ரஜாயேய' என்று ஸங்கல்பித்து, மஹத் தத்வம் முதலாக இருபத்து நான்கு அசேதந தத்வங்கள் அடங்கிய ஸமஷ்டி ஸ்ருஷ்டியைச் செய்து, பிறகு, பஞ்சீகரண ப்ரக்ரியையினால் மஹத்தத்வம் முதலிய தத்வங்களனைத்தையும் பிரித்து ஒன்றோடொன்று சேர்த்து வ்யஷ்டி ஸ்ருஷ்டியைச் செய்து அண்டத்தை உண்டுபண்ணவே, அந்த அண்டத்தினிடமிருந்து ஸமஷ்டி ஜீவ ஸ்வரூபனான நான்முகன் பரமபுருஷ ஸங்கல்ப விசேஷத்தால் பகவல் லீலாவிபூதியைத் தழைக்கச் செய்கிற கார்ய துரந்தரனாக ஆவிர்ப்பவித்தான். புராண கவியாகவும் ஜகத் ப்ரசாவிதாவாகவுமிருக்கிற ஸ்ரீமந் நாராயணன் ஹம்ஸரூபியாக அவனுக்கு ஸேவை ஸாதித்து, 'ப்ரபஞ்ச ஸ்ருஷ்டியைச் செய்வாயாக' என்று அந்த ப்ரஹ்ம தேவனை அநுக்ரஹித்து, அதற்கு ஸாதநமாக நான்கு வேதங்களையும் உபதேசித்தான். நான்முகன் பரமபுருஷாநுக்ரஹத்தால் உத்புத்தமான ஜ்ஞாந சக்தியுடன் பகவந் நியமநத்தைத் தலைக்கட்ட எண்ணங் கொண்டவராய், மனத்தினால் ஸநத்

* ஸ்த்ரீ ஜாதியைப் பற்றி இதில் செய்யப்பட்டுள்ள தூஷணங்களை நாம் ஆமோதிக்கிறோமில்லை. ஸ்ரீ வே. தீ. ஸம்பாதகன்.



குமாராவஸ்தையில் ஸநகாதிகளை உண்டுபண்ணினான். அவர்கள் ஜாயமாந தசையில் ஏற்பட்ட பகவத் கடாக்ஷ ப்ரபாவத்தால் ப்ரக்ருதி பந்த வைதேசிகர்களாக நிவ்ருத்தி மார்க்க நிஷ்டர்களாக ஆகவே, அதனால் நிர்வேத முற்ற ப்ரஹ்ம தேவன் மீண்டும் விசேஷமாகத் தபஸ்ஸைச் செய்து பரம புருஷாநுக்ரஹத்தைப் பெற்று, மீண்டும் ப்ரபஞ்ச ஸ்ருஷ்டி கார்யத்தில் தனக்கு ஸஹாயர்களாக மனத்தினால் மரீசி முதலிய பத்து குமாரர்களை உண்டு பண்ணினார். அவர்களிலும் நாரதர் முதலிய சிலர் ப்ரவ்ருத்தி மார்க்க விமுகர்களாக ஆனார்கள். புலஸ்த்யர் முதலிய சிலர் ப்ரவ்ருத்தி மார்க்காபிமுகர்களாக இருந்து, ப்ரபஞ்ச ஸ்ருஷ்டி செய்து வரும் தருணத்தில், பகவல் லீலாவிபூதியானது செழித்து ஓங்கி வளராமலிருப்பதை நோக்கி ப்ரஹ்மதேவன் மிகக் கவலையுற்று, 'இவ்வித ஸ்ருஷ்டியால் ப்ரஜாவ்ருத்தி உண்டாகாது; ஆண் பெண்கள் சேர்ந்து ஸுகத்தை அநுபவித்து ஆநந்த பரவசர்களான தம்பதிகளால் உண்டு பண்ணப்படும் ப்ரஜைகளே ப்ரபஞ்சத்தை நிறைவு பெறச் செய்யும்' என்று எண்ணி, தன் தேஹத்தை ஸங்கல்பத்தால் இரண்டாகச் செய்து, ஒரு பாகத்தைப் புருஷவடிவமுள்ளதாகவும் மற்றொரு பாகத்தை ஸ்த்ரீ வடிவமுள்ளதாகவும் செய்து, ஸ்வாயம்புவமநு என்றும் சதரூபை என்றும் பெயருள்ள ஆதி தம்பதிகளாக ஆனான். இந்த ஆதி தம்பதிகளிடமிருந்து ப்ரியவ்ரதன் உத்தாநபாதன் என்கிற ராஜாக்களும், ஆகூதி தேவஹூதி ப்ரஸூதி என்கிற கந்யகைகளும் உண்டானார்கள். இந்த ஆதி தம்பதிகளின் புத்ரர்களிடமிருந்தும் புத்ரிகளிடமிருந்தும் முறையே பெருகின ப்ரஜாவ்ருத்தியினால் உலகம் முழுவதும் நிறைந்ததென்று விஷ்ணுபுராணம் ஸ்ரீ பாகவதம் முதலிய புராணங்களும் இதிஹாஸங்களும் பகர்கின்றன.

இப்படிப்பட்ட ஸ்ருஷ்டியில் க்ஷேத்ரஜ்ஞர்களுக்கு ஸுகதுக்காநுபவ ஸாதநங்களாக இருக்கிற தேஹங்கள் பஞ்ச பூதங்களாக இருந்தபோதிலும், ஆண்களுக்கும் பெண்களுக்கும் குணங்களாலும் சக்தியினாலும் அறிவினாலும் மனோதிடத்தாலும் பலத்தாலும் உள்ள வேற்றுமையானது மஹா மேருவுக்கும் சிறுகுன்றுக்கு முள்ளது போல் இருக்கிறது. எவ்விதத்தில் பார்த்தாலும் புருஷ ஸ்ருஷ்டி உயர்வுள்ளது; ஸ்த்ரீ ஸ்ருஷ்டி மிகத் தாழ்ந்தது. பகவத் ஸ்ருஷ்டியின் ஸ்வபாவமே இவ்விதம் அமைந்துள்ளது. குணங்களுக்குள் உயர்ந்ததான சௌர்யம், தைர்யம், காம்பீர்யம், விநயம், ஜ்ஞாநம், ஔதார்யம் முதலிய குணங்கள் புருஷர்களிடம் நித்யவாஸம் செய்கின்றன. பயம், சாபல்யம், அஜ்ஞாநம், அவிவேகம், பலஹாநி, க்ரௌர்யம், அவிநயம், கார்ப்பண்யம் முதலிய ஹேயகுணங்களுக்கு ஸ்த்ரீகள் நிதிகள் போல் இருக்கின்றனர். தோற்றத்தாலேயே இக்குணங்களை அவர்களிடம்

காணலாம். புருஷ லக்ஷணம் புகழத்தக்கதே. ஆர்ஜவம் புருஷர்களிடமும், கௌடில்யம் ஸ்த்ரீகளிடமும் உண்டு என்பது எல்லாராலும் மறுக்கத்தக்க தன்று. மேலும், புருஷர்கள் ப்ரக்ருதி ஸம்பந்தத்தால் விலக்கத்தகாதன வான அவிவேகம், அவிநயம், மதம், அஸூயை, மாத்ஸர்யம் முதலிய துர்க் குணங்களை நீக்கி, உயர்ந்த ஸ்வபாவங்களையும் நல்லொழுக்கங்களையும் நன்னடத்தைகளையும் ஔதார்யத்தையும் பெருந்தன்மையையும் அடை வதற்காகவே தவறாமல் ஐந்தாவது வயதில் கல்வி கற்கத் தொடங்கி, இருபத்திரண்டு வயது வரையில் இடைவிடாமல் அதில் பயின்று தேர்ச்சியைப் பெற்று, நல்ல குணங்களையும் நல்ல ஒழுக்கங்களையும் அடைந்து, உயர்ந்த பதங்களை நாடி, பற்பல மனிதர்களுடன் பழகி, பல விஷயங்களை அறிந்து, ஸாராஸாரங்களையும் ஹிதாஹிதங்களையும் ஹேயோ பாதேயங்களையும் ஆய்ந்து எடுக்கத் திறமையுள்ளவர்களாகவும் ஆகி, தகுந்த வயது வந்தவுடன் தக்க புத்தி பலத்துடனும் தேஹபலத்துடனும் மேதா பலத்துடனும் உலகத்தில் பழகி, செல்வத்தையும் கீர்த்தியையும் கௌரவத் தையும் ஸௌசீல்யத்தையும் நன்னடத்தையையும் பெற்று, கல்பக வ்ருக்ஷம்போல் வேண்டும் பயன்களை விருப்பமுள்ளவர்களுக்குப் பயக்கிறவர்களாகக் காணப் படுகின்றனர். நிக்ரஹாநுக்ரஹ சக்திகளும் புருஷர்களிடம் ஸாந்நித்யம் செய்கின்றன.

உலகம் தொடங்கி இதுகாறும் தொன்று தொட்டுத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிற ச்ருதிகளையும் ஸ்ம்ருதிகளையும் இதிஹாஸங்களையும் மஹரிஷிகளான புராணங்களையும் உலக வ்ருத்தாந்தங்களையும் கவனித்துப் பார்த்தால், அறிவினாலும் குணங்களாலும் தர்மாசரணங்களாலும் மேன்மை புருஷர்களுக்கே காணப்படுகிறது. ஸத்யத்தில் ஹரிச்சந்த்ரனும், தயையில் ஜீமூதவாஹநனும், சௌர்யத்தில் ஸ்ரீராகவனும், சரணாகத ரக்ஷணத்தில் சிபியும், தர்மத்தில் யுதிஷ்டிரனும், பக்தியில் ப்ரஹ்லாதனும், பொறுமையில் மாந்தாதாவும், கொடையில் கர்ணனும், ப்ரஹ்மஜ்ஞாநத்தில் சுக ப்ரஹ்ம ரிஷியும், தேவதா பாரமார்த்ய வேதநத்தில் பராசரரும், வ்ரதாநுஷ்டாநத் தில் அம்பரீஷ மஹாராஜனும், தபஸ்ஸில் த்ருவனும் நிகரில்லாதவர்களென்று வாங்மயங்களனைத்தும் கோஷிக்கின்றன. ஒரிடத்திலாவது புராதந க்ரந்தங் களில் ஸ்த்ரீகளுக்கு ப்ராதாந்ய மிருந்ததாகவாவது, ஸ்வாதந்த்ரய மிருந்த தாகவாவது, குணங்களால் புருஷர்களைவிட அதிக சிறப்பு வாய்ந்தவர்களாக இருந்ததாகவாவது காணப்படவில்லை. மைத்ரேயீ கார்க்கீ அநஸூயை அருந்ததி போன்ற சில ஸ்த்ரீ வ்யக்திகள் ஜ்ஞாநத்தாலும் கற்பினாலும் குணங்களாலும் சரித்ரத்தினாலும் சிறப்புற்றவர்களாக இருந்தார்க ளென்று தெரியவருகிறது. அவர்களும் புருஷர்கள் போல் ஸ்வாதந்த்ர்



யத்தை வஹித்தவர்களாகவாவது, புருஷர்களுக்குப் புலப்படாத விஷயங் களை ப்ரத்யக்ஷ த்ருஷ்டி பலத்தால் அறிந்து புருஷர்களுக்குத் தர்மோபதேசம் செய்தார்களென்றாவது தெரியவில்லை. அவர்களும் பர்த்ரு பாரதந்த்ர்யத்தை வஹித்து, அவர்களிடம் தர்ம ப்ரச்நம் பண்ணி, தெரிய வேண்டிய விஷயங் களைத் தெரிந்து, தங்களுக்கு உண்டான ஸம்சயங்களைப் போக்கிக்கொண்டு, அவர்களைத் தேவதைகள் போல் பாவித்துச் சுச்ரூஷை செய்து ஜந்ம ஸாபல் யம் பெற்றார்களென்றே தெரியவருகிறது.

மேலும் ஸ்த்ரீகளுடைய ஜந்மாவானது மஹா பாபத்தால் ஸம்பவிக் கிறது. இந்த விஷயத்தில் பகவத்கீதையிலுள்ள 'மாம் ஹி பார்த்த வ்யபா ச்ரித்ய யேபி ஸ்யு: பாபயோநய:। ஸ்த்ரியோ வைச்யாஸ் ததா சூத்ரா ஸ்தேபி யாந்தி பராம் கதிம்।' என்கிற கீதாசார்யனான ஸ்ரீ கண்ண பிரானுடைய வசநமே ப்ரமாணம். இக்காரணத்தினாலேயே ஸ்த்ரீ களுக்கு வேதாத்யயநம் கூடாதென்றும், ஸ்வதந்த்ரையாகக் கணவனின்றித் தனித்து அக்நி பரிசர்யை ஹோமம் முதலிய வைதிக கார்யங்களை அவர்கள் செய்யக் கூடாதென்றும், ஜாதகர்மம் நாமகரணம் முதலிய வைதிக ஸம்ஸ்கா ரங்கள் கூட மந்த்ர மில்லாமலே செய்விக்கப்பட வேண்டுமென்றும், பெரும் பான்மையாக ஸ்த்ரீகள் சூத்ரர்களுக்கு ஸமாநர்களாகவே நடத்தத் தக்கவர்க ளென்றும், சூத்ரர்கள் போலவே ப்ரணவோச்சாரணத்தில் அதிகார மில்லா தவர்களென்றும் ஸ்ம்ருதிகளும் இதிஹாஸங்களும் ஸாத்விக புராணங்களும் கூறுவதுடன், சிஷ்டாசாரமும் அவ்விதமே அவர்களைக் கட்டுப்படுத்தி உல கத்தை நிலைபெறச் செய்திருக்கிறது. இப்படிக்கின்றி, அவர்களுக்கு ஸ்வா தந்த்ர்யம் கொடுத்தால் அவர்கள் கூட்டிலிருந்து வெளியில் விட்ட புலிகள் போல் கொடுஞ் செய்கைகளைச் செய்து, உலகத்தை அதோகதியாக ஆக்கி விடுவார்கள். இதை உள்ளத்தில் கருதியே புராதநர்களான அறிஞர்கள், 'பிதா ரக்ஷதி கௌமாரே பர்த்தா ரக்ஷதி யௌவநே। புத்ரோ ரக்ஷதி வார்த்தகே ந ஸ்த்ரீ ஸ்வாதந்த்ர்யமர்ஹதி' என்று பகர்ந்தனர்.

ஸ்த்ரீ ஜந்மாவானது பாரதந்த்ர்யத்துக்கே உட்பட்டது. அவர்களுக்கு ஸ்வாதந்த்ர்யம் அநர்த்தத்தை உண்டுபண்ணும். எப்படி ஜலத்தில் விழுந்த மாம்ஸம் மீன்களாலும், தரையில் விழுந்தது நாய் நரிகளாலும், ஆகாயத்தில் எறியப்பட்டது பக்ஷிகளாலும் கவர்ந்து கொள்ளப்படு கிறதோ, அப்படியே ஸ்வாதந்த்ர்யம் வஹித்த ஸ்த்ரீகள் எந்த இடத்தை நாடினாலும் ஆங்காங்கு தூர்த்தர்களாலும் காமுகர்களாலும் விடர்களா லும் கவரப்பட்டவர்களாக உருவழிந்து, பற்பல தீங்குகளுக்கு உட் பட்டு, கண்ணுள்ளவர் பார்த்துப் பரிதபிக்கத் தக்க நிலைமையை அடைவி

றார்கள். ஸ்த்ரீகளுக்குப் பாடசாலையில் படிக்காமலே பிறப்பிலேயே இரண்டு குணங்கள் ஏற்பட்டு விடுகின்றன. அவைகளாவன:—வஞ்சனையில் பாடவமும் க்ரௌர்யமும். இந்த விஷயத்தில் முறையே, 'ஸ்த்ரீணாமஶிக்ஷிதபடுத்வமமாநுஷீஷு ஸந்த்ருஶ்யதே கிமுத யா꞉ ப்ரதிபோதவத்ய꞉। ப்ராகந்தரிக்ஷகமநாத் ஸ்வமபத்யஜாதமந்யைர்த்விஜை꞉ பரப்ருதா꞉ கலு போஷயந்தி॥' என்கிற மஹாகவியாகிய காளிதாஸனுடைய வசநமும், 'ந விஷேண ந ஶஸ்த்ரேண நாக்நிநா ந ச ம்ருத்யுநா। அப்ரதீகாரபாருஷ்யா꞉ ஸ்த்ரிய ஏவ ஸ்த்ரிய꞉ க்ருதா꞉॥' என்கிற அபியுக்தருடைய வசநமும் ப்ரமாணங்களாக அறியத்தக்கன. அறிவிலிகளாகவும் பீருக்களாகவும் அஸம்ஸ்க்ருதர்களாகவுமிருப்பதனாலேயே இவர்களை 'ஸ்த்ரீஶூத்ரத்விஜபந்தூநாம் த்ரயீ ந ஶ்ருதிகோசரா।' என்று வேதாக்ஷரங்களைக் காதால் கேட்கத் தகாதவர்களான சூத்ரர்கள் ப்ரஷ்ட ப்ராஹ்மணர்கள் இவர்களுடைய ராசியில் சேர்த்திருக்கிறார்கள். ஸ்த்ரீகளுக்குப் புருஷர்களைப்போல் துரூஹங்களான கல்விகளைக் கற்கவும், அவைகளை மனத்தில் தரிக்கவும் திறமை இல்லாமலிருப்பதுடன், அர்த்த ஸம்சயங்கள் தர்ம ஸங்கடங்கள் நேர்ந்த தருணத்தில் த்ருடமான மனத்தினால் ஊஹித்து, 'இதுதான் உண்மை இதுதான் செய்யத்தக்கது' என்று நிர்த்தாரணம் செய்யவும் சக்தி கிடையாது. இக்காரணத்தினாலேயே அவர்களுக்கு அபலைகளென்று பெயர். தேஹபலமில்லாமலிருப்பதுடன் புத்தி பலமுமில்லாதவர்களென்பதைக் கருதியே அவர்களுக்கு இப்பெயர் உலகத்தில் நிலைபெற்றிருக்கிறது. ஸ்த்ரீகள் ஸம்ஸ்காரமில்லாதவர்களாதலால், அவர்களுக்குத் தோஷம் நேர்ந்துவிட்டால் மண்பாண்டங்கள் போல் அவர்கள் தூரத்தில் விலக்கத் தக்கவர்களே; சாபல்யமுள்ளவர்களாதலால் ஸநாதந தர்ம மர்யாதையை விரைவில் உல்லங்கநம் செய்து, சாச்வதமான அபகீர்த்தியைத் தமக்குத் தேடிக்கொள்வதுடன் தாம் உதித்த குலத்திற்கும் தாம் புகுந்த குலத்திற்கும் அழிவில்லாத அபகீர்த்தியை விளைவிப்பார்கள். இவர்களுடைய அதிசாரத்தால் வர்ணஸாங்கர்யம் ஏற்பட்டு உலகத்தில் சுத்தி என்கிற பதார்த்தமே இருக்குமிடம் தெரியாமல் போகிறது. இந்த விஷயத்தில் 'ப்ரதுஷ்யந்தி குலஸ்த்ரிய꞉। ஸ்த்ரீஷு துஷ்டாஸு வார்ஷ்ணேய ஜாயதே வர்ணஸங்கர꞉। ஸங்கரோ நரகாயைவ குலக்நாநாம் குலஸ்ய ச।' என்னும் பகவத் கீதாவசநம் ப்ரமாணம். அந்ய போக்யமாயும், பாதந்த்ர்யமாயும், பீருவாயும், சக்தியற்றதாயும், மனோபலத்தையும் தேஹபலத்தையுமிழந்ததாயும், விவேக வைதேசிகமாயும், கௌடில்ய நிதியாயும், சாபல்ய வாஸக்ருஹமாயும், அநர்த்த நிதாநமாயும், வைதுஷ்ய ரஸமறுகாந்தாரமாயுமிருக்கிற ஸ்த்ரைணத்திற்கு ஜ்ஞாநம் எவ்வாறு ஸம்ப



விக்கும்? அவர்களுக்கு ப்ரவசந சக்திதான் ஏது? தர்ம ரஹஸ்யங்களை ஸூக்ஷ்ம த்ருஷ்டியினால் அறிவதற்கோ, பிறர்க்கு அவ்வித தர்ம ரஹஸ்யங்களை அறிந்து உபதேசிப்பதற்கோ யோக்யதை ஏது? ஒன்றுமே கிடையாதன்றோ?

இவர்கள் நிலைமை இவ்வாறு இருக்க, இக்காலத்தில் சில ஸ்த்ரீகள் தங்கள் நிலைமையை மறந்து 'கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி தானுமதுவாகப் பாவித்து' என்கிற வசநத்திற்கு உதாஹரணமாக முன்னின்று விதக்த புருஷர்களைப் போல் தாங்களும் போலி ஸபைகளைக் கூட்டி, அவைகளில் அக்ராஸநம் ஸஹாஸநம் உபாஸநம் உச்சாஸநம் ஏகாஸநம் முதலிய ஆஸநங்களில் வீற்றிருந்து, ஒருபோதும் கண்டறியாததும் முகர்ந்து பார்க்கப்பட்டிராததும் கனவில்கூட புலப்பட்டிராததுமான தர்ம சாஸ்த்ர விருத்தங்களான சில போலி தர்மங்களை எடுத்துரைப்பதும், 'இதுதான் இக்காலத்திற்குத் தக்கது' என்று கோஷிப்பதும், 'இதே ப்ரஜைகளுக்கு க்ஷேமகரம்; இதையே இனி எல்லோரும் அநுஷ்டிக்க வேண்டும்; ராஜகீய ஸபையில் இந்த விஷயத்தைத் தெரிவித்துச் சட்டமாக்கி விடவேண்டும்' என்பதும், 'புருஷர்களுடன் ஸமத்வம் நமக்கிருக்கவேண்டுமே யொழிய அவர்களுக்கு அடிமைபோல் நாமிருப்பது ஸரியல்ல' வென்பதும், 'பால்ய விவாஹம் செய்தால் வைதவ்யம் விரைவில் வந்து விடுகிறதாதலால் தக்க யௌவந வயது பர்வம் வந்த பிறகு பெண் தானாகவே தன் மனத்துக்குப் பிடித்த புருஷனை வரித்துக்கொள்வது தான் யுக்தம்' என்றும், 'மநு பராசரர் யாஜ்ஞவல்க்யர் முதலிய மஹர்ஷிகளுடைய வசநங்கள் அக்காலத்திற்கு உரியனவே யன்றி இக்காலத்துக்கு அவை ஒவ்வா' என்றும், 'ரிஷிகள் நம்மைப் போல் புத்திசாலிகளான பெரியோர்களல்லர்' என்றும் சொல்லிக்கொண்டு, கலி மஹாராஜனுடைய ராஜ்யத்தில் நாட்டியம் ஆடுகிறார்கள். இந்தக் கெட்ட சேஷ்டைகள் அனைத்தும் எல்லாம் வல்ல இறைவனுடைய அருளால் பேய்க் காற்றில் பஞ்சுபோல் பறந்துபோகும். விளக்கு அணையும்பொழுது படர்ந்து எரிவது போல் விநாசம் ஸமீபத்தில் வரப்போவதால் அவர்களுக்கும் ஒளி பரந்து வீசுகிறது.

மேலும் ஸ்த்ரீகளுக்கு ஸபாப்ரவேசத்திற்கே அதிகாரம் கிடையாது. அவர்கள் வீற்றிருந்தாலே அது ஸபையாகாது. அவர்கள் கூடுமிடம் ஆட்டு மந்தை மாட்டு மந்தை போல் ஸங்கமென்றே சொல்லப்படும். அது ஸபா சப்தத்தால் வ்யவஹரிக்கப்பட மாட்டாது. இது விஷயத்தில், 'ஸபா ராஜாऽமநுஷ்யபூர்வா। அஶாலா ச' என்கிற ஸூத்ரங்களை இயற்றிய பாணிநி மஹர்ஷியே ப்ரமாணம் [முறையே இந்த ஸூத்ரங்களின் அர்த்தங்களாவன—(க) 'ராஜபர்யாயவசந꞉ ஶப்த꞉ பூர்வபதம் யஸ்ய ஸமாஸஸ்ய

த்வந்த்வோ நபும்ஸகம் ஸ்யாத்; இநஸபம், ஈஶ்வரஸபம் | பர்யா யவசநஸ்யைவேஷ்யதே, நேஹ, ராஜஸபா, சந்த்ரகுப்தஸபா; அமனுஷ்யஶப்தோ ரூட்யா ரக்ஷ:பிஶாசாதீநாஹ, ரக்ஷஸ்ஸபம், பிஶாசஸபம் | (உ) ஸங்காதார்தா யா ஸபா தத்ந்த தத்புருஷ: க்லீபம் ஸ்யாத் ஸ்த்ரீஸபம் ஸ்த்ரீஸங்காத இத்யர்த்த:| அஶாலா கிம்| தர்மஸபா தர்மஶாலேத்யர்த்த:] சப்த ஸ்வரூப நிஷ்பாதகரான மஹர்ஷியின் வசநமே சப்த ஸ்வரூபத்தில் ப்ரமாணமாக ஆதரிக்கத் தக்கது. அந்த மஹர்ஷியே 'அஶாலா ச' என்கிற ஸூத்ரத்தினால் 'ஸ்த்ரீஸபம்' என்பது தான் ஸாது சப்த மென்றும், இந்த ஸமஸ்த பதத்தில் ஈற்றிலிருக்கிற ஸபா சப்தம் கேவல ஸங்கத்தைத்தான் சொல்லுகிற தென்றும், தர்ம சாலையைச் சொல்லாதென்றும் ஸங்காதார்த்தத்தை உணர்த்துவதினாலேயே நபும்ஸக லிங்கமாக வழங்கப்படுகிற தென்றும் பகர்ந்திருக்கிறார். ஆதலால் ஸ்த்ரீகள் கூடுமிடம் ஒருக்காலும் ஸபையாகாது. அவர்கள் சொல்லும் வசநங்களும் தர்ம நிர்ணயகங்களாகா. அவர்களுக்குத் தர்ம ஸபையில் ப்ரவேசமும் கிடையாது. சாஸ்த்ரங்கள் ஒருங்கு சேர்ந்து, ஸ்த்ரீகளின் ஸ்வாதந்த்ர்யத்தையும் தர்ம ப்ரவசநத்தையும் ஸபா ப்ரவேசத்தையும் மறுக்கின்றன.

மேலும் 'ஸபா வா ந ப்ரவேஷ்டவ்யா வக்தவ்யம் வா ஸமஞ்ஜஸம்| அப்ருவன் விப்ருவன் வாபி நரோ பவதி கில்பிஷீ ||' என்கிற யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதி வசநத்தால் ஸபா ப்ரவேசம் புருஷனுக்கே உரியதென்றும், அச்சபையில் பக்ஷபாதத்தாலோ லோபத்தாலோ ந்யாய விருத்தமாகச் சொல்பவன் பாபத்துக்கு ஆளாவான் என்றும் ஏற்படுகிறதே ஒழிய, ஸ்த்ரீகளுக்கு ஸபா ப்ரவேசத்தில் அப்யநுஜ்ஞையும் ஸபையில் தர்மவிஷயோபந்யாஸா ப்யநுஜ்ஞையும் இல்லை. ந்யாயத்தை எடுத்து உரைப்பதினால் ஸுக்ருதமும் ந்யாய விருத்தமாகச் சொல்வதால் பாபமும் ஸபையில் புருஷர்களுக்குத் தர்ம சாஸ்த்ரம் சொல்லுகிறதே ஒழிய ஸ்த்ரீகளுக்குச் சொல்லவில்லை. மேலும், 'ஸஹிதா ஸமயே ஸமயேந ஸஹிதா ஸமயேந ஸஹிதா ஸமயேந ச ஸாது காரா:| கவிதாஶ்ச விபாவிதா: கவித: கவிதா விபாவிதாஶ்ச விபாதி ஸபா ||' என்கிற லௌகிக வ்யவஹாரத்தாலும் ஸபைக்குக் கவிகளாலும் ப்ரபுக்களாலும் பெருமை கூறி யிருக்கிறதே ஒழிய, ஸ்த்ரீகளாலும் அவர்களுடைய வைதுஷ்யத்தாலும் ஒருவிதமான பெருமையும் சொல்லப்பட்டிருக்கவில்லை.

இப்படி உலக நிலைமை இருக்க, அநாதிகாலமாக உலகத்தில் நிலைபெற்றிருக்கிற தர்மங்களை நல்ல தென்றாவது தீய தென்றாவது சொல்வதற்கும், அவைகளை மாற்றி வேறுவிதமாகத் தர்மங்களை ஏற்படுத்துவதற்கும் எவ்வாறு பக்ஷப்ராயர்களான ஸ்த்ரீகள் திறமையுடையவர்களாக ஆவார்கள்? தற்காலத்தில் சில மாதரசிகள் கலி மஹாராஜனுடைய கொடுங் கோலாட்சி முறையினால் தூண்டப்பட்டுத் தர்ம நிர்ணயம் செய்வதற்காக ஆரம்பித்து, சட்ட நிர்ணய ஸபையிலும் ப்ரவேசித்து, ஸ்வாதந்த்ர்யம் பெற்று வருகிறார்கள். சாஸ்த்ரீயங்களான தர்மங்களை முற்றிலும் அழிக்க எண்ணங்கொண்டு, பால்ய விவாஹத்தைக் கண்டித்து, ப்ரௌடா விவாஹம் செய்யத்தக்கதென்று ஒரு மசோதாவை ஸ்ருஷ்டித்து, அதைச் சட்ட சபையில் அரங்கேற்றுவதற்காகப் புஷ்கல முயற்சிபண்ணி வருகிறார்கள். இது உலகத்திலுள்ளோர் அனைவர்க்கும் மனவருத்தத்தை உண்டாக்குகிறது. இவ்விஷயத்தில் தார்மிகர்களுடைய மனம் கொந்தளிக்கிறது. வைதிக மார்க்கமானது ஓடி ஒளியும்படியான காலம் வந்துவிட்டதே என்று நாஸ்திகர்கள் மதி மயங்குகிறார்கள். 'மத விஷயங்களில் நாங்கள் ப்ரவேசிப்பதில்லை' என்று வாக்களித்த மாட்சிமை தங்கிய மஹாராணி விக்டோரியா அவர்களுடைய வாக்கானது பொய்யாகா தென்கிற திட நிச்சயமுள்ள இந்திய தேசத்திலுள்ள ஆஸ்திகர்களின் மனம் பதைக்கிறது. எவன் ஒரு விஷயத்தைச் சட்ட ஸபையில் தனக்குள்ள செல்வாக்கினால் எழுதிக் கொண்டுவந்து இதை ஸப்யர்கள் நன்கு விசாரித்துச் சட்டமாக ஏற்படுத்தி உலகத்தில் அநுஷ்டாநத்திற்கு வரும்படி செய்யவேண்டுமென்று முயற்சிக்கிறானோ, அம்மனிதன் முதலில் ஆஸ்திகனாக இருக்கவேண்டும்; நடத்தையில் சிறந்தவனாக இருக்கவேண்டும். அவன் ஸ்வய நலம் பாராட்டாதவனாக இருப்பதும் தவிர, விசாலமான புத்தியுடனும் தர்ம சாஸ்த்ரங்களில் நல்ல பயிற்சியுடனும், உலக நன்மையைக் கருதுகிறவனாகவும் இருத்தல் வேண்டும். அவன் ஜனங்களுக்கு ப்ரதிநிதியாகவும் இருக்கவேண்டும். முற்கூறியவண்ணம் ஒருவிதமான யோக்யதையுமில்லாமல் ஏதோ கலி காலக் கொடுமையினால் ப்ரஹ்ம த்வேஷம் முற்றியிருக்கிற சில போலி இந்தியர்களுடைய துருபதேச பலத்தால் நிரபராதிகளான உயர்குலத்தாருடைய ஸநாதந தர்மத்தை அழிக்க முன்வந்திருக்க, பேதையர்களுடைய சாஸ்திரத்திற்கும் யுக்திக்கும் இசையாத காமவாதங்களைச் செவியுற்று, தர்ம ஸபாஸ்தாரர்களும் மந்த்ரிகளும் ராஜ ப்ரதிநிதிகளும் அந்த வாதங்களை உலகத்தாருடைய ஸம்மதி இல்லாத காரணம்பற்றியும் மஹாராணி அவர்களுடைய ப்ரதிஜ்ஞா விரோதம் ஏற்படுகிற தென்பதைக் கருதியும், இந்தக் காமவாதத்துக்கு மூலம் ப்ரஹ்ம த்வேஷமென்பதை உத்தேசித்தும், சட்ட ஸபையில் அரங்கேற்றாமல் புறக்கணித்து, கலி புருஷ தூதர்களின் மநோரதத்தைப் பயனற்றதாகச் செய்து, தொன்று தொட்டுத் தொடர்ந்து வந்துகொண்டிருக்கிற தர்ம மார்க்கம் அழியாவண்ணம் தக்க முயற்சி எடுத்துக் கொள்ளும்படி ஸர்வஜ்ஞனும் ஸர்வ சக்தனும் ஸர்வாந்தர்யாமியா யிருக்கிற பரம புருஷன் அனுக்ரஹம் புரிவாராக.



186789

## ஸ்ரீ வை. ஸி. ஸபை ஸம்பந்தமான விஜ்ஞாபநம்.

நமது 'வேதாந்த தீபிகை'யின் 18-வது வருஷம் பூர்த்தியடைந்து, 19-வது ஸம்புடம் இந்த ஸஞ்சிகை முதல் ஆரம்பமாகிறது. ச்ரிய:பதி இதுவரையில் கடாக்ஷித்துத் 'தீபிகை'யையும் ஸபையையும் நடத்திக்கொண்டதுபோல் இனியும் இவைகளை விசேஷித்து நடத்திக் கொள்வனென்றே நம்புகிறேன். நம் தேசத்தில் தற்காலம் பொதுவாக ஸகல ஸமூகங்களும் முக்கியமாக நமது ஸ்ரீ வைஷ்ணவ ஸமூஹமும், பலவிதமான வ்யாகுலங்களுக்கும் குறைபாடுகளுக்கும் உட்பட்டு, எல்லாம் ஒரே குழப்பமாக முடியுமோவென்று சங்கிக்க வேண்டியிருக்கிறது. இந்தத் தசையில் பாரமார்த்திக வழி நோக்கி ஜனங்களுக்கு ஆத்ம ஞானத்தையும் அதைப் பெறுவதற்கான மார்க்கங்களையும் தனித்து உபதேசிக்க, நமது 'தீபிகை' போன்ற ஸாதனங்கள் ஸொல்பங்களாகவே இருக்கின்றன. ஜகத்தில் புதிது புதிதாகத் தோன்றும் பல ப்ரவ்ருத்திகளையும், அவற்றின் பலனாக பல ப்ரகாரமாக ஏற்படக்கூடிய பலன்களையும் கவனிக்குமளவில், இனி இந்த ப்ரபஞ்சத்தில் ஸாது வ்ருத்திக்கும் மனோபாவத்திற்கும் இடமிருக்கக்கூடுமோ வென்ற கவலை பெரிதும் ஏற்படுகிறது. ஆனால் 'சரண்யன் ஒருவனுண்டு; அவன் ஆஜ்ஞை நித்யமாகும்,' என்ற நம்பிக்கை இன்னும் நம்மை விட்டகலவில்லை யாகையால் ஸத்ஸம்ப்ரதாய வாஸனையையாவது அவிச்சின்னமாக ரக்ஷித்து வரலாமென்ற எண்ணத்தில் நிர்வாகிகள் ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையையும் தீபிகையையும் யதாசக்தி நடத்தி வருகின்றார்கள். இதில் பல குறைகள் இருக்கலாம். ஆனால் கால சக்த்யாதிகளிலேற்பட்டுள்ள ஸங்கோசம் காரணமாக ஏற்படக்கூடிய அம்மாதிரிக் குறைகளை நமது அபிமானிகள் க்ஷமித்துத் 'தீபிகை' மூலம் இனி ஸமூஹத்திற்கு உயர்ந்தவளவு ப்ரயோஜன மேற்படுமாறு செய்யவேண்டுமென்பது இப்பொழுது செய்துகொள்ள வேண்டிய முக்ய ப்ரார்த்தனையாகும். வ்யக்திகள் தர்மாநுஷ்டான நிரதர்களாகவிருக்க முயற்சிப்பது எப்படி அவசியமாகிறதோ, அப்படி லோக ஸங்க்ரஹ விஷயத்திலும் முயற்சி யெடுத்துக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகிறது. மதாசாரங்களை எப்படியாகிலும் ஒழித்துவிட வேண்டுமென்று பாச்சாத்யர்களுடைய ஸம்பந்தம் காரணமாக நினைக்கும் நம் தேசத்தவர்களுடைய ஸங்க்யை அதிகரித்துக்கொண்டு வருகிறது. அவர்கள் அது விஷயத்தில் செய்யும் ஆர்ப்பாட்டமும் மிகவும் பலமாக விருக்கிறது. இவர்கள் பெரும்பாலும் ராஜீயம் முதலிய லௌகிக விஷயங்களில் பிரதானமாக விருப்பதாலும், வர்த்தமானப் பத்ரிகைகள் பெரும்பாலும் இவர் வசமிருப்பதாலும், தங்களுடைய நவீனக் கொள்கைகளையும் அபிப்பிராயங்களையும் பிறர்மீது வற்புறுத்த அவர்கள் ஸகல விதத்திலும் ப்ரவ்ருத்திக்கின்றனர். இப்படி ஸ்வதந்த்ரர்களாக விருப்பவர்களுடைய ஸங்க்யை குறைவானாலும் அவர்கள் அநுஷ்டிக்கும் உபாயங்கள் காரணமாகவும் அவர்களுக் கிருக்கும் வேறு ஸௌகர்யங்கள் காரணமாகவும் அவர்கள் கக்ஷியை ப்ரபலப்படுத்துவது ஸுலபத்தில் ஸாத்யமாகிறது. ருஷியா, துருக்கி முதலிய பாச்சாத்ய தேசங்களில் ஸமீப காலத்தில் இம்மாதிரிக் கிளர்ச்சிக்காரர்களால் ஸமஸ்த தேசாசாரமும் நாகரிகமும் மாற்றப்பட்டுப் புதுப்புதுப் பரீக்ஷைகளெல்லாம் அங்கு செய்யப்படுகின்றன. ஸநாதன தர்மிகள் இதே மாதிரி விஷ



மம் நம் தேசத்திலும் ஏற்படாவண்ணம் தடுக்கவேண்டுமானால் அதை ரக்ஷிக்கும் விஷயத்தில் உத்கடமான ப்ரவ்ருத்தியைச் செய்யவேண்டியது மிகவும் அவசியமாகிறது. இந்த ஆபத்துக்களை நிவர்த்திக்க இக்காலத்திற்கு அநுகுணமான உபாயங்களை அநுஷ்டித்தாகவேண்டும். மதாசார்யர்களும், மற்ற வைதிக லௌகிக ப்ரமுகர்களும் இதே விஷயமாக அடிக்கடி சிந்தித்து ஸந்மார்க்கத்தை நிலைநிறுத்தவேண்டியிருக்கிறது. இக் கைங்கர்யத்தில் நமது ஸபையும் தீபிகையும் எவ்வளவு தூரம் ஈடுபடக்கூடுமோ அவ்வளவும் ஈடுபடத் தயாராக விருக்கின்றன வென்பதை இங்குத் தனித்து ப்ரஸ்தாபிக்கவேண்டுவதில்லை. ஆனால் இவற்றிற்கு இன்னும் விசேஷித்து ஒரு க்ரியாசக்தி யேற்படுமாறு செய்யவேண்டியது நமது ஸமூஹத்தினுடைய முக்ய பொறுப்பாகும். பல மேதாவிகளும் ஸாதுக்களும் நிறைந்த நமது ஸமூஹம் தீபிகை மூலம் எவ்வளவோ மேன்மையை யுண்டுபண்ணக்கூடும். ஆனால் அதற்கான தீவ்ர மனோபாவமும் ப்ரவ்ருத்தியும் போதுமான வளவு இன்னும் ஏற்படாதது சோகிக்கத்தக்கதே. இனியாவது நாம் ஜோரும் ஆதரவு ஏற்படுமாறு ஸ்ரீசரணயன் ஸங்கல்பிக்கவேண்டும்.

பொதுஸ்திதி இவ்விதமிருக்க, நமது ஸபையின் விசேஷ ச்ரமமொன்றைப் பற்றியும் இங்கு ப்ரஸ்தாபிக்க வேண்டியதாக விருக்கிறது. ஸபையின் அர்த்தஸ்திதி அவ்வளவாகத் திருப்திகரமாக இருக்கவில்லை. பல்லாயிரக் கணக்கான சந்தாதார்கள் நமக்கிருக்கவேண்டுமென்று நாம் ஆசைப் பட்டுக்கொண்டிருக்க, உள்ள சந்தாதாரர்கள் எல்லாரிடமிருந்தே பூர்ண சந்தா தொகையும் நமக்கு அவ்வப்பொழுது சேரக்கூடிய பாக்கிய மில்லாமலிருக்கிறது. ஸொல்ப ஆதாரத்துடன் நடத்தப்படும் நமது ஸபைக்குச் சந்தா பாக்கி ஏராளமாக இருந்துவிட்டால் ஸபை நிர்வாகம் எவ்விதம் ஸாத்யமாகும்? ஆந்த்ர தேசத்திலும் நமது ஸித்தாந்த ப்ரவசனத்தை ஸபை கூட்டி நடத்தவேண்டுமென்று சில ப்ரமுகர்கள் அபிப்பிராயப்பட்டதை யநுசரித்து வேதாந்த தீபிகை என்ற பெயருடனேயே ஒரு தெலுங்கு பாஷா மாஸ பத்ரிகையும் ஸபையில் ஆரம்பிக்கப்பட்டு, அதில் 10 ஸஞ்சிகைகளும் வெளிவந்திருக்கின்றன. ஆனால் எதிர்பார்த்தபடி அதற்குப் பூரண ஆதரவு ஏற்படாததால் ஸபை அதன் மூலம் விசேஷ அர்த்த ச்ரமத்திற்குள்ளாக வேண்டியதாயிற்று. ஆகவே இந்த ஸமயத்தில் தீபிகாபிமானிகள் அதில் அபிமானத்துடன் புதிய வருஷச் சந்தாவை உடனே அனுப்பத் திருவுள்ளம்பற்றுவதுடன், இன்னும் ஆங்காங்கு புதிதாக நமக்குச் சந்தாதாரர்கள் சேருமாறு செய்தால் நிரம்ப அநுகூலமாக விருக்கும். சந்தா பாக்கியுள்ளவர்கள் பாக்கியையும் சேர்த்து அனுப்புவது அவர்கள் நமக்குச் செய்யக்கூடிய உபகாரமாகும்.

மற்றொரு ப்ரார்த்தனையும் செய்துகொள்ளத் துணிகின்றேன். ஸபையின் ச்ரம தசையை உத்தேசித்துத் 'தீபிகாபிமானிகள் எல்லாரும் சந்தா தவிர நன்கொடை மூலம் விசேஷ த்ரவ்ய ஸஹாயமும் செய்யத் திருவுள்ளம் பற்றினால் மிக அநுகூலமாக விருக்கும். முன் பல ஸமயங்களில் இவ்விதம் நமது அபிமானிகள் ஸபைக்கு உபகரித்திருக்கிறார்கள். அதே மாதிரி இப்பொழுதும் அவர்கள் உபகரித்து இந்தப் பிரார்த்தனை ஸபலமாகும்படி செய்யத் திருவுள்ளம் பற்றுவார்களென நம்புகிறேன். அப்படி உபஹரிப்பவர்களுடைய திருநாமங்கள் தனியே தீபிகையில் ப்ரசுரிக்கப்படும்.

சே. லக்ஷ்மீநரஸிம்மன்.

கார்யதரிசி.

# கடிதங்கள்.

ஸ்ரீ. வே. தீ. ஸம்பாதக ஸ்வாமிக்கு:

சென்ற ஆவணிமீ 17உ-க்குச் சரியான 1-9-28-ல், இவ்விடத்தில், ஸ்ரீவிசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தைப் பரவச் செய்வதற்காக ஒரு சபை ஏற்படுத்தவேண்டும் என்று பின்வருமாறு ஓர் அறிக்கை இவ்விடத்தில் இருக்கும் ஒரு ஆஸ்திக ஸ்ரீ வைஷ்ணவரால் எழுதப்பட்டது. அது வருமாறு:—

"கலியின் மஹிமையினால் ப்ருஹ்மண்ய மென்பதே தலையெடுக்கமாட்டாமலிருந்து வரும் விஷயமும்; அதிலும் அநுஷ்டாநங்கள் சிறிது மில்லாமல் ஒவ்வொருவரும் வெளி வேஷத்தின் தன்மை இன்னதெனவும், ஆந்தரீக (உள்ளடங்கிய விஷய)த்தின் தன்மை இன்னதெனவும் தெரிந்துகொள்ளாமலிருப்பதும், சிற்சில விஷயங்களினால் ஆழ்ந்து பார்க்குமிடத்துத் தெளிவுறுகின்றன. ஆனால் அவர்க்குப் படிப்புக் குறைவாயிருக்கலாமோ வென்று ஆலோசிக்கின் அன்று; அல்லது புத்தித் தாழ்வாயிருக்கலாமோ வென்றால் அப்படியும் காணப்படவில்லை. ஏனெனில், ஒவ்வொருவரும் மஹா புத்தி சாலிகளாகவே யிருக்கிறார்கள். பின்னை என்னெனின்: ஒவ்வொரு விஷயத்திலும் ஆழ்ந்த ஆராய்ச்சியின்மைதான் என்று தெரியவருகிறது.

அதிலும் வைணவ மதத்தினர் பெரும்பான்மையோர் பல விடங்களிலு மிருக்கின்றனர். அதிற் பெரும்பான்மையாக ஷடி மதத்தின் கொள்கையின்கண் ணுள்ள ஆழ்ந்த கருத்து என்னவென்றும், ஷடி அநுஷ்டாநத்தின் உள்விஷயம் இன்னதென்று அறிந்திருந்தும் அவற்றைக் கடைப் பிடிப்பது மிகக் குறைவாகவே இருக்கிறதெனத் தெரிகிறபடியால், மற்ற லௌகிக விஷயங்களெத்தனையோ இருந்தபோதிலும், இநகர வாஸிகளாகிய ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஓர் ஸமாஜமியற்றி, விஷய பர்யாலோசனை செய்து கொஞ்சம் கொஞ்சமாக முன்னேற்ற மடையலாமென்ற கருத்துடன் இவ்வறிக்கை வெளியிடலாயிற்று".

இந்த அறிக்கையை எழுதியவர் வித்வானென்றோ நல்ல அநுஷ்டாநபரரென்றோ சொல்வதற்கில்லாவிடினும், சில பெரியவர்கள் வாக்யங்களில், அவைகளின் கருத்து, அவற்றின் ப்ரயோஜனம், அநுஷ்டான விஷயம், அவைகளை அநுஷ்டித்தவர்கள் அவர்களடைந்த பயன்கள் இவைகளை நன்றாய் ஆலோசித்து, ஒரு பாசுரமோ அல்லது ஒரு ச்லோகமோ சொல்லுவதானால் அதன் பொருள்களைத் தெரிந்தமட்டில் அநுஸந்தானம் செய்ய வேண்டுமென்ற ஓர் பிடிவாதத்தையுடையவர். அவர், ஸ்ரீ வேதாந்த தீபிகையில் வெளிவந்துள்ள தட்டை வித்வான் ஸ்ரீ. உப. வே ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமிகளால் செய்யப்பெற்றதான 'மத விசாரம்' என்ற வ்யாஸத்தைப் பார்த்தவுடன், 'இது ஸதாசார்ய கடாக்ஷத்தினால் எம்பெருமானுடைய பரம க்ருபை யிருந்தபடி என்' என்று அடங்காப் ப்ரீதியுடையவராய், சிற்சில ஸ்வாமிகளிடம் சென்று விண்ணப்பித்ததும், ஏதோ சிலர் ஸம்மதி அளித்ததினால் சென்ற புரட்டாசிமீ 22-உக்குச் சரியான 7-10-28-ல் மாலை 7-மணிக்கு ஸ்ரீ வைகுண்டபதி ஸந்நிதி மண்டபத்தில் கூட்டமொன்றைக் கூட்டினார். அதில் முன் சொன்ன அறிக்கையும், ஷடி ஸ்ரீ. வே. தீபிகையிற் கண்ட மத விசாரமும், அதிலேயே பெ. வ. ஸ்ரீநிவாஸன்-சொரையூர் என்பவரால் எழுதப்பட்ட, 'ஆர்யர்களின் துர்த்தசை' என்ற விஷயமும், பின்னர், ஸ்ரீமான் காரப்பங்காடு உப. வே. வெங்கடாசார்ய ஸ்வாமியால் முன் தீபிகையில் அநுக்ரஹித்திருந்த விண்ணப்பமும் வாசித்தார். அதன்மேல் ஒரு ஸ்வாமி, முக்யமாய் அநுஷ்டாநமே ப்ரதானம், அவ்வநுஷ்டாநத்தில் காலையில் தீர்த்தமாடி ஸந்த்யா வந்தனஞ் செய்தல், பத்து உருவாவது காயத்ரீ ஜபித்தல் இவைகளை முக்யமாய்விடாமற் செய்துவரவேண்டுமென்று ஸாதித்தருளினார். வேறொருவர், நாம் செய்ய வேண்டிய கடமைகளைப் பற்றி ஆலோசனை செய்ய இன்னொரு நல்ல தினம் பார்த்து ஆரம்பம் செய்வோமென்று ஸாதித்தருள, ஸபையில் எழுந்தருளியிருந்த சுமார் 20-திருநாமங்களும் ஸ்ரீ சரண்யனைப் பிரார்த்தித்து யதாஸ்தானத்திற் கெழுந்தருளினர்.

இந்த ஸபை, ஸர்வலோக சரண்யனான ஸ்ரீ வாஸுதேவன் க்ருபாப்ரவேசத்தால் 'ஸ்வல்பஸமாரம்பா: வ்ருத்திமாயாந்தி' என்ற ப்ரமாணத்தைக் கைக்கொண்டு இடையே நின்றுவிடாமல் ஓங்கி வளர்ந்து வருமாறு ஸ்ரீ சரண்யனைப் பிரார்த்திக்கின்றேன்.

தூத்துக்குடி, 9-10-28.

எம். எஸ். ஸுந்தரராஜய்யங்கார்,
Retired Cash Keeper.

ஸ்ரீ:

। ஸ்ரீமதே ரங்கநாதஸிம்ஹவாஸுதேவாய நம: ॥
யோऽஜ: ப்ரவிஶ்ய ஊஉ வாஅபிஜாஂ ப்ரஸூத்வாஂ
ஸஂஜீவயத்யவிருஶக்தியுத: ஸ்வயா ந: ।
அந்யாஂஶ்ச ஹஸ்த அரணஶ்ரவணஸுமாதீந்
ப்ராணாஸுமொ ஸமவதே வாஸுதேவாய தஸ்மை ॥

# பத்ராதிபரின் குறிப்புகள்.

சென்ற மாஸத்தில், மஹாத்மா காந்தி என்பவர், தமது ஆச்ரமத்தில் அநிவார்யமான வ்யாதியால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த ஒரு கன்றுக் குட்டியை விஷத்தைக் கொடுத்து கொல்வித்தார் என்று நாம் அறிகிறோம். அந்தக் கன்று ஸஹிக்கக் கூடாத கஷ்டத்தால் வருந்திக்கொண்டிருந்ததாம்; வைத்யர்கள் அதற்கு இனி ஜீவநத்திற்கு ஹேதுவில்லையென்று கைவிட்டு விட்டார்களாம்; அம்மாதிரியான அவஸ்தையில் அந்தக் கஷ்டத்தை அநுபவித்து வரும்படி அதை உயிருடன் வைத்திருப்பதைக் காட்டிலும் அதைக் கொன்று விடுவதே அதற்கு உபகாரமாகு மென்றும், அம்மாதிரி செய்வதில் ஜீவ ஹிம்ஸை ஸம்பவிக்க மாட்டாதென்றும் அவர் அபிப்பிராயப்படுகிறார். இது சாஸ்த்ர ஸம்மதமாகுமா வென்பதை விசாரிக்க வேண்டியது நமக்கு ப்ராப்தமாகின்றது.

அஹிம்ஸை

"ந ஹிம்ஸ்யாத் ஸர்வா பூதாநி" [ஒரு ப்ராணியையும் ஹிம்ஸை செய்யக்கூடாது] என்பது நமது சாஸ்த்ர வாக்யம். இவ்விடத்திற் சொல்லப்பட்டுள்ள ஹிம்ஸையானது என்ன அர்த்தத்தைக் குறிக்கின்றது என்பதை விசாரித்தால், பிறருக்கு தாத்காலிக பீடை செய்வதைமாத்ரம் அது குறிக்க மாட்டாதென்றும், கேவலம் ப்ராண வியோகம் செய்வதை மாத்ரமும் அது குறிக்க மாட்டாதென்றும் ஏற்படும். பிறருக்கு துக்கத்தைக் கொடுக்கக்கூடிய வ்யாபாரமெல்லாம் ஹிம்ஸையாகுமென்று சொல்லும் பக்ஷத்தில், ஒருவனை ரக்ஷிப்பதற்காகச் செய்யப்படும் வ்ரண சிகித்ஸை முதலியவைகளும் அவை தற்காலத்தில் பீடாகரங்களாக இருப்பதால் ஹிம்ஸையாக ப்ரஸங்கிக்கும்; அது நமக்கு அநிஷ்டம். மற்றவர்களுடைய ப்ராண வியோகத்தைச் செய்வது மாத்ரம் ஹிம்ஸையாகும் என்று சொல்லும் பக்ஷத்தில் ஒருவனுடைய சொத்தை அபஹரித்துக் கொண்டு அவனைக் கஷ்டப்படும்படி விடுவது ஹிம்ஸையன்று என்று ஒத்துக்கொள்ளும்படி ஸம்பவிக்கும்; அது நம்மால் செய்யப்படும் வ்யவஹாரத்திற்கு விருத்தம். ப்ராண வியோகம் செய்யும்பொழுதெல்லாம் நாம் ஹிம்ஸை செய்கிறோம் என்று சொல்வதும் சாஸ்த்ரத்திற்கு ஒத்ததன்று; அப்படி ப்ராண வியோகம் செய்வதால் நாம் ப்ராணிக்கு நன்மையையே செய்கிறோம் என்பது சாஸ்த்ர ஸித்தமாக இருக்கும் பக்ஷத்தில் அது ஹிம்ஸையாகமாட்டாது. ஆகையால், எந்த வ்யாபாரம் மற்றவர்களுக்குப்பீடையைச்செய்து கொண்டு இம்மையிலோ மறுமையிலோ தீமைக்கும் காரணமாகின்றதோ அந்த வ்யா

பாரமே ஹிம்ஸை என்று ஹிம்ஸைக்கு லக்ஷணம் ஏற்படுகின்றது. நமது சாஸ்த்ரமும் அம்மாதிரியான ஹிம்ஸையைத் தான் நிஷேதிக்கின்றது.

ப்ராக்ருதத்தில் மஹாத்மா செய்த வ்யாபாரமானது ஒரு ஜந்துவின் ப்ராண வியோக ரூபமான கார்யம். இந்த வ்யாபாரத்தால் தற்காலத்தில் அந்த ஜந்து தான் அநுபவித்துக் கொண்டிருந்த கஷ்டத்திலிருந்து விடுவிக்கப்பட்ட படியால், இது அதற்கு நன்மையைச் செய்வதாகின்றதே தவிர தீமையைச் செய்வதாக மாட்டாது என்று மஹாத்மா சொல்லுகிறார். இது ஒத்துக்கொள்ளத் தகுந்ததாகுமோ? ப்ராண வியோகத்தால் அந்த ஜந்துவின் கஷ்டம் நிவ்ருத்தமாகி விட்டதென்று நாம் நிச்சயமாகச் சொல்லமுடியாது. அது அநுபவிக்கும் கஷ்டம் நமது இந்த்ரியங்களுக்குக் கோசரமாகாமல் மறைந்துவிட்டதென்று மாத்ரம் சொல்லக்கூடும். இந்த ஸ்தூல தேஹம் விலகின பிறகும் இந்த இந்த்ரியங்களை எடுத்துக் கொண்டே ஜீவன் வெளிப் படுகிறான் என்று சாஸ்த்ரம் சொல்லுகிறபடியால், இந்த்ரிய விஷயச் சேர்க்கையால் ஏற்படும் துக்கம் அதற்குத் தொடர்ந்து நிற்கக் கூடும். மஹாத்மா சொல்லுகிறபடி தேஹ வியோகத்துடன் அந்தக் கஷ்டம் நிவ்ருத்தமாகி விடுகின்றது என்று நாம் ஒத்துக் கொண்ட போதிலும், ஸகல ஜந்துக்களுக்கும் ப்ராணவியோக காலத்தில் ஏற்படும் ஒரு பெரிய கஷ்டத்தை நாம் அதைக் கொல்வதாகிற நமது வ்யாபாரத்தால் அதற்குப் புதிதாக உண்டுபண்ணுகிறோமன்றோ? ஆகையால், இந்த லோகத்தின் அநுபவம் ஸம்பந்தப்பட்டவரையில் நமது வ்யாபாரம் அதற்கு எவ்வித நன்மையையும் ஜநிப்பிக்கவில்லை என்பது திண்ணம். மறுமையில் அதற்கு நமது வ்யாபாரம் நன்மையை ஏற்படுத்துகின்றது என்று யார் சொல்லத் துணிவார்? அப்ரத்யக்ஷமான மறுமையில் சாஸ்த்ரமொன்றே ப்ரமாணம். அந்தச் சாஸ்த்ரம், இம்மாதிரி வ்யாபாரத்தால் ப்ராண வியோகமடையும் ஜீவன் ச்ரேயஸ்ஸைப் பெறுகிறான் என்று ஓரிடத்திலும் சொல்லவில்லை. ஆகையால் நாம் சாஸ்த்ர விதியை ஆதாரமாகக் கொள்ளாமல் நமது யுக்தி பலத்தை மாத்ரம் அவலம்பித்து ஒரு ஜந்துவின் ப்ராண வியோகத்தைச் செய்தால், அது நல்ல எண்ணத்தைக் கொண்டுச் செய்யப்பட்ட போதிலும், சாஸ்த்ரத்தால் நிஷேதிக்கப்பட்டுள்ள ஜீவஹிம்ஸையில் சேர்கின்றது என்றே நாம் நினைக்கிறோம்.

தவிரவும் ஜந்துக்களுக்கு மரணம் நேர்வதையும் அந்த மரணம் நேரும் காலத்தையும் நாம் நிச்சயமாகச் சொல்ல சக்தர்களா? இனி ஜீவதசைக்கு ஹேதுவில்லையென்று வைத்யர்கள் கைவிட்ட பிறகும் ஜந்துக்கள் ஜீவிப்பதை நாம் அநுபவத்தில் பார்க்கிறோமன்றோ? அப்படி ஒருகால் ஜீவதசை நீடித்து நிற்கக்கூடியதாக ஒரு ஜந்துவுக்குக் கர்ம பலம் இருக்கும் பக்ஷத்தில், அந்த ஜந்துவுக்கு நாம் ப்ராண வியோகத்தைச் செய்வித்து, ஸ்வபாவத்தால் அதற்குக் கிடைக்கக்கூடிய ஆயுஸ்ஸை அதற்குக் கிடைக்கவொட்டாமல் தடுப்பது தர்மத்துக்கு ஒத்ததாகுமோ? இம்மாதிரியான பல காரணங்களை உத்தேசித்தே, நமது மஹர்ஷிகள், ஒரு ஜந்துவின் ப்ராணனையும் எந்த அவஸ்தையிலும் ஒருவரும் விலக்கக்கூடாதென்று பலமாக நிஷேதித்திருக்கிறார்கள். இவையெல்லாவற்றையும் ஆலோசித்துப் பார்க்கும்பொழுது, ப்ராக்ருத வ்யாபாரத்தில் மஹாத்மா ப்ரமித்துவிட்டார் என்றே நாம் நினைக்கிறோம்.



மஹாத்மா காந்தி அநேக அம்சங்களில் தேவ ஸம்பத்தின் அபிமுகமாகவே ஜநித்தவர் என்பது நமது நம்பிக்கை. ஆர்ஜவம், ஸத்யம், அக்ரோதம், சாந்தி, பூததயை முதலிய நற்குணங்கள் அவரிடம் குடிகொண்டிருக்கின்றன; டம்பம், அதிமாநம், பாருஷ்யம் முதலிய துர்குணங்கள் அவரிடம் ஸர்வதா இல்லை. ஆனாலும், மற்றவர்களைப் போல அவரும் கர்ம வச்யராக தேஹ ஸம்பந்தம் பெற்றிருக்கிறபடியால், ஜ்ஞாந ஸங்கோசத்திற்குப் பாத்ரமாகி சிற்சில விஷயங்களில் ப்ரமத்தை அடையக் கூடியவரே. ஆகையால் அவர் இன்னும் சில அம்சங்களிற் போல இந்த அம்சத்திலும் நமது மஹர்ஷி வாக்யங்களுக்கு விருத்தமாக நடந்தார் என்பது நமக்கு ஆச்சர்யத்தை ஜநிப்பிக்கவில்லை. ஆனால், பல ப்ரகாரங்களில் வ்யபதிஷ்டராக இருக்குமவர்கள் தவறி நடந்தால், அது ஜகத்துக்குப் பெரிய க்ஷோபத்திற்குக்காரணமாகி விடுமே என்று மாத்ரம் நாம் துக்கிக்கிறோம்.

* * *

**விவாஹச் சீர்திருத்தம்**

நமது கந்யகைகளின் விவாஹ விஷயமாகச் சாஸ்த்ர விருத்தமானச் சிலப் புதிய அநுஷ்டாநங்களை ஏற்படுத்த வேண்டுமென்றும், ராஜாங்கத்தாரைக் கொண்டு அந்த அநுஷ்டாநங்களை ஸகல ஜநங்களிடத்திலும் நிர்பந்தமாக நடவடிக்கைக்குக் கொண்டு வர வேண்டுமென்றும் ஸ்வல்ப காலமாக மஹத்தான ப்ரயத்நங்களைச் செய்து வந்த சாஸ்த்ர விரோதிகளின் மநோரதம் தாத்காலிகமாக பக்நமாகி இருக்கின்றது. டில்லியில் கூடின சென்ற மாஸத்தியச் சட்ட ஸபையிலேயே அதைப்பற்றி ஒருவித நிர்ணயத்தைச்செய்து விட வேண்டுமென்பது அவர்களுடைய முயற்சியாக இருந்தது. கேவலம் ப்ராஹ்மணர்களைப்பற்றி மாத்ரமாவது அல்லது வேத சாஸ்த்ரத்தை ப்ரமாணமாகக் கொண்டாடும் ஹிந்துக்களைப்பற்றி மாத்ரமாவது இம்முயற்சி செய்யப்பட்டிருந்தால்; வேத சாஸ்த்ர விதிகளை ஆதரிக்குமவர்கள் சட்டசபையில் ஸ்வல்பமாகவே இருக்கிறபடியால், அது இவ்வளவு காலத்துக்குள் நிறைவேற்றத்தை அடைந்திருக்கும். அப்படிக்கில்லாமல் அம்முயற்சி இந்தியாவில் வஸிக்கும் ஸகல ஜாதியர்களுக்கும் பொதுவாகச் செய்யப்படும்படி ஸங்கல்பித்து விட்டபடியால், அது துலுக்கர்களுக்கும் மற்றும் சிலருக்கும் ஆக்ரோசத்தை ஜநிப்பித்தது. அவர்களும் ஆக்ஷேபிக்கவே, அது இப்பொழுது கொஞ்சம் உபரோதத்தை அடைந்ததென்று நாம் நினைக்கிறோம். ப்ராயேண, வரப்போகும் தை மாஸத்தில் அது மறுபடியும் சட்ட சபையின் ஆலோசனைக்கு வரலாம்; அப்பொழுது அதன் அந்வய வ்யதிரேக நிச்சயமும் ஏற்படலாம்.

சட்ட ஸபையில் அங்கத்தினராக இருக்கும் ஹிந்துக்களுள் பலர் நமது சாஸ்த்ரத்தில் உதாஸீந புத்தியைச் செய்கிறவர்களாகவே இருக்கிறார்கள். காலாநுகுணமாக சாஸ்த்ரத்தின் விதி நிஷேதங்களை மாற்றுவதில் அவர்களுக்கு எவ்வித ஆக்ஷேபமும் இல்லை. இம்மாதிரியான விஷயங்கள் பர்யாலோசனைக்கு வரும்பொழுது அவர்களெல்லாரும் வாசாலர்களாக இருக்கும் சாஸ்த்ர விரோதிகளின் கக்ஷியைச் சேர்வார்களே தவிர தர்மாதர்ம விசாரத்தில் ப்ரவ்ருத்திக்க ப்ரயத்நப்படமாட்டார்கள். ஆகையால் இந்த ஆலோ-

சனை, சட்டஸபையாரின் அதிகாரத்திற்கு உட்பட்டு வந்துவிட்டால், நிர்ணயம் நமக்கு விருத்தமாகவே ஏற்படும் என்பது நிச்சயம். ஆனால் இம்மாதிரியான ஆலோசனைகளெல்லாம், ராஜாங்கத்தின் முக்யாதிகாரிகளாக இருக்கும் ராஜப்ரதிநிதி முதலியவர்களுடைய அநுமதியின் பேரிலேயே சட்டஸபையின் ஆலோசனைக்கும் அதன் நிர்ணயத்திற்கும் வரவேண்டும். அவர்கள் அநுமதி கொடுக்காவிட்டால் சட்ட சபையாரால் செய்யக்கூடியது ஒன்றுமில்லை. ராஜப்ரதிநிதிகள் ப்ரக்ருத விஷயத்தில் எவ்வித ஆக்ரஹத்தையும் செய்வதற்கு ஹேதுவில்லையாதலால், அவர்களுடைய புத்தியில் பதியும்படி இந்த விஷயத்தின் ந்யாய விரோதம் எடுத்து விவரிக்கப் பட்டால், அவர்கள் அந்த ந்யாய விரோதத்தைப் பார்த்துத் தமது அநுமதியைக் கொடுக்காமல் இந்த ஆலோசனையைச் சட்டஸபையாரின் நிர்ணயத்திற்கு வாராமலே நிறுத்திவிடலாம். நமது சாஸ்த்ர விதியின் ஸம்ரக்ஷணம் அவர்கள் அதீனமாகவே இப்பொழுது இருக்கின்றது. ஆகையால், அவர்களை வசீகரணம் செய்துகொள்வதற்கு நமது பெரியோர்களெல்லாரும் ப்ரயத்நப்பட வேண்டும். மடாதிபதிகளும் மற்றும் அவர்களைப் போன்ற சக்தர்களான சாஸ்த்ர விச்வாஸிகளும், இதுவரையில் செய்த முயற்சியால் த்ருப்தர்களாகிவிடாமல், மறுபடியும் பலவத்தரமான முயற்சியைச் செய்து, சாஸ்த்ர விரோதிகளாற் செய்யப்படும் ப்ரயத்நத்தின் ந்யாய விரோதம் தர்ம விரோதம் இவையெல்லாவற்றையும் தெளிவாக எடுத்துச் சொல்லக்கூடிய திறமையுள்ள வாக்மிகளைக்கொண்டு ராஜப்ரதிநிதி முதலானவர்களைப் போதிப்பிக்கவும் ஸாமாந்ய ஜநங்களுக்கு அவைகளை உபதேசிக்கவும், அவர்களைக்கொண்டு பலவத்தமமான ஆக்ஷேபங்களைச் செய்விக்கவும் ப்ரவ்ருத்திக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

டில்லி சட்டஸபையில் நமது ப்ரதிநிதி அங்கத்தினருள் ஒருவராக இருக்கும் ஸ்ரீமாந் எம். கே. ஆசார்யர் என்பவர், இது விஷயமாகச் செய்து வரும் விடாமுயற்சியை நாம் ஒருகாலும் மறக்கக்கூடாது. வைதிக கக்ஷிக்குப் பெரியதொரு அவலம்பமென்று நம்மால் எதிர் பார்க்கப்பட்ட ஸ்ரீமாந் மாளவியா என்பவர் அந்த வைதிக கக்ஷியைக் கொஞ்சம் பரித்யஜித்து எதிர் கக்ஷிக்குச் சார்பாக நடக்க ஆரம்பிக்கவே, ஸ்ரீ ஆசார்யர் ஒருவரே தனியாக சாஸ்த்ர விரோதிகளுக்கு எதிர்த்து நிற்கும்படி ஸம்பவித்தது. இப்பொழுது விரோதிகளின் ப்ரயத்நத்திற்கு ஏற்பட்டிருக்கும் தாத்காலிக உபரோதத்திற்கு இவருடைய பரிச்ரமமும் ஒரு முக்யமான காரணம். இவர் இப்பொழுது சட்ட சபையில் இருக்கிறபடியாலும், ராஜப்ரதிநிதி முதலானவர்கள் இவருக்குப் பரிசிதர்களாயும் இவரிடம் ஒருவித கௌரவ புத்தியைச் செய்பவர்களாயும் இருக்கிறபடியாலும், இவரை ஆச்ரயித்தே நாம் செய்யக்கூடிய முயற்சிகளைச் செய்வது உசிதமாக இருக்கும். க்ஷோபம் ஆலங்கமாக இருக்கின்றது; பெரியதாகவும் இருக்கின்றது. நமது ஸ்த்ரீ தர்மம் குலைந்துவிட்டால் நாம் ஹதர்களென்றே சொல்லவேண்டும். ஆகையால், ஆஸ்திகர்களெல்லாரும் இது விஷயத்தில் மிக்க ஜாக்ரதையுடன் இருத்தல் வேண்டும்.



“அநேந ஜீவேநாத்மநாநுப்ரவிஶ்ய நாமரூபே வ்யாகரவாணி” (சாந்தோக்யம்)

“ப்ருதகாத்மாநம் ப்ரேரிதாரம் ச மத்வா ஜுஷ்டஸ்ததஸ்தேநாம்ருதத்வமேதி” “போக்தா போக்யம் ப்ரேரிதாரம் ச மத்வா ஸர்வம் ப்ரோக்தம் த்ரிவிதம் ப்ரஹ்மமேதத்” (ஶ்வேதாஶ்வதரோபநிஷத்)

“நித்யோ நித்யாநாம் சேதநஶ்சேதநாநாம் ஏகோ பஹூநாம் யோ விததாதி காமாந்” [கடோபநிஷத்)

“[illegible]”

---

“இப்படி நிர்விகாரனை சேதநனாகவும் விகாராஸ்பதமான அசேதநமாகவும் அவன் ஆகையிலும், அவன் தனக்கு இயற்கையாயுள்ள நிர்விகாரத்வ லக்ஷணத்தை விடாமலே இருந்தான்”.

“இந்த ஜீவனுக்குள் ஆத்மாவாக அநுப்ரவேசித்து தேவாதி விசித்ர ஸ்ருஷ்டியையும் அவைகளுக்குப் பெயர்களையும் செய்வேன்” “ஸம்ஸாரமாகிற சக்ரத்தில் தன்னைச் சுழற்றுகிறவன் பரமாத்மா வென்றும், அப்படிச் சுழற்றப்படுகிறவன் அவனைக் காட்டிலும் வேறுபட்டவ னென்றும் உணர்ந்து, அந்த உணர்ச்சியால் ப்ரீதனான பரமாத்மாவுக்கு ப்ரீதி பாத்ரனாய், ஜீவன், முக்தியை அடைகிறான்”.

“அநுபவிக்கிறவன் அநுபவிக்கப்படுவது ஏவுகிறவன் இவர்களை உள்ளபடி அறிந்துகொண்டு” “இந்த மூன்று வகைப்பட்ட வஸ்துக்களெல்லாம் என்னால் உனக்குச் சொல்லப்பட்டன”.

“அநேக நித்யர்களான சேதநர்களுடைய இஷ்டங்களை, எந்த நித்ய சேதநன் பூர்த்திசெய்து வைக்கிறானோ”,

---

“ஸத்யம் சாந்ருதம் ச” என்னும் வாக்யம் ப்ரஹ்மம் அநுப்ரவேசித்திருக்கையிலும் அது தோஷங்களால் அஸ்ப்ருஷ்டமாகவே இருக்கின்றது என்பதை வ்யக்தமாகச் சொல்லுகின்றது.

“ததஃ அம்ருதத்வமேதி’ ஜீவாத்மாவும் பரமாத்மாவும் வெவ்வேறு என்பதை அறிவதால் ப்ரமம் நீங்கி மோக்ஷம் கிடைக்கின்றது என்பதை இந்த வாக்யம் சொல்லுகின்றது.

‘போக்தா’ என்னும் சப்தம் ‘போக்தாரம்’ என்னும் இரண்டாம் வேற்றுமை அர்த்தமுள்ளது.

"ஜ்ஞாஜ்ஞௌ த்வாவஜாவீஶநீஶௌ" (ஶ்வேதாஶ்வதரோபநிஷத்)

இத்யாதி ஶ்ருதிஶதை:, தது³பப்³ரும்ஹணை:

"ஜக³த்ஸர்வம் ஶரீரம் தே ஸ்தை²ர்யம் தே வஸுதா⁴தலம்"

"யத்கிஞ்சித் ஸ்ருஜ்யதே யேந ஸத்த்வஜாதேந வை த்³விஜ | தஸ்ய ஸ்ருஜ்யஸ்ய ஸம்பூ⁴தௌ தத்ஸர்வம் வை ஹரேஸ்தநு:||" (விஷ்ணுபுராணம்)

---

"ப்ரக்ருதி தத்வத்திற்கும் ஜீவதத்வத்திற்கும் பதியாகவும் குணங்களுக்கு ஈசனாகவுமிருக்கும்",

"இரண்டு ஆத்மாக்களும் பிறப்பற்றவர்கள்; ஆனால் ஒருவன் அஸங்குசிதமான ஜ்ஞாந முடையவன், மற்றொருவனுடைய ஜ்ஞாநம் ஸங்குசிதம்; ஒருவன் நியமிக்கிறவன், மற்றொருவன் நியமிக்கப்படுகிறவன்."

இவை முதலிய கணக்கற்ற ச்ருதிவாக்யங்களாலும், இவைகளுக்கு உபப்ருஹ்மணங்களாயுள்ள

"ஜகத் முழுவதும் உன்னுடைய சரீரம்; பூமியின் ஸ்திரத்தன்மை உன் அதீநம்".

"எந்த எந்த வஸ்து ஸ்ருஷ்டிக்கப்படுகின்றதோ, அந்தந்த வஸ்துவுக்கெல்லாம் பகவானே காரணம்; அப்படி ஸ்ருஷ்டிக்கப்படும் வஸ்துவெல்லாம் பகவானுடைய சரீரம்,"

---

'நித்யோ நித்யாநாம்' இந்த ச்ருதி ஆத்ம வஸ்துக்கள் நித்யங்கள் என்பதையும், அவை கணக்கற்றவை யென்பதையும் சொல்லுகின்றது.

ஈஶநீஶௌ—ஈசன் அநீசன்; அதாவது நியமிக்கிறவன், நியமிக்கப்படுகிறவன். இவ்விடத்தில் 'ஈஶாநீஶௌ' என்று இருக்கவேண்டிய சப்தம் 'ஈஶநீஶௌ' என்று இருப்பது சாந்தஸம்.

வஸுதா⁴தலம் தே ஸ்தை²ர்யம்—பூதலமானது உன்னுடைய ஸ்தைர்யமே. அதாவது, 'பூமியின் ஸ்திர ஸ்வபாவமானது உன் ஸங்கல்பாதீநம்' என்று சொன்னதாயிற்று. இது ஒரு நிதர்சநமாகச் சொல்லப்பட்டது. 'ஸகல ப்ரபஞ்சத்தின் உத்பத்தி ஸ்திதி ப்ரவ்ருத்திகளெல்லாம் பகவததீநம்' என்பது இதன் கருத்து.

அஹமாத்மா ஸர்வபூ⁴தாஶயஸ்தி²த:—ஆத்மதயா ஸர்வபூ⁴தாஶயஸ்தி²த: இத்யர்த²:. 'ஆத்மா எப்படி சரீரத்துக்கு நியமேந ஆதாரமாயும் நியந்தாவாயும் சேஷியாயும் இருக்கிறதோ, அப்படியே நானும் ஸர்வ பூதங்களுக்குள்ளும் இருந்து கொண்டு ஆதாரமாயும் சேஷியாயும் இருப்பதுடன் ப்ரவர்த்தக ரூபமான நியமநத்தையும் செய்கிறேன்' என்பது குறிப்பு.



"அஹமாத்மா கு³டா³கேஶ ஸர்வபூ⁴தாஶயஸ்தி²த:|" "ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி³ ஸந்நிவிஷ்டோ மத்த: ஸ்ம்ருதிர்ஜ்ஞாநமபோஹநம் ச |" (ஸ்ரீ கீதா)

இத்யாதி வேதவித³க்³ரேஸர வால்மீகி பராஶர த்³வைபாயந வசோபி⁴ஶ்ச வா

---

"ஹே அர்ஜுந! நான் எல்லா பூதங்களுக்கும் ஆத்மா; எல்லா பூதங்களுடைய ஹ்ருதயத்திலும் நான் இருக்கிறேன்,"

"எல்லாருடைய ஹ்ருதயத்திலும் நான் ஆத்மாவாக இருக்கிறேன்; என்னிடத்திலிருந்தே எல்லா ஜீவன்களுக்கும் ஜ்ஞாநம் முதலானவை ஏற்படுகின்றன," இவை முதலான, வேதத்தின் அர்த்த மறிந்தவர்களுள் அக்ரேஸரர்களாக இருக்கும் வால்மீகி பராசரர்

---

ஸர்வஸ்ய சாஹம்—இந்த வாக்யத்துக்கும் கீழ்ச் சொல்லிய கருத்துதான். 'ஸந்நிவிஷ்ட:' என்பதற்கு 'ஆத்மதயா ஸந்நிவிஷ்ட:' என்பது பொருள். அதாவது 'கேவலம் ஆகாசம் போல் ப்ரவேசித்திருக்கவில்லை; ஆனால், ஆத்மாவாக ப்ரவேசித்து என்னுடைய ஸங்கல்பத்தாலேயே எல்லாவற்றையும் நியமநம் செய்துகொண்டு வருகிறேன்' என்று சொன்னதாயிற்று. 'ஸ்ம்ருதி' என்பதற்கு 'நினைவு' என்பது அர்த்தம். முன் அநுபவிக்கப்பட்ட விஷய ஸம்பந்தமாக பின் அதன் ஜ்ஞாநம் ப்ரத்யக்ஷமின்றிக்கே கேவலம் அநுபவ ஸம்ஸ்காரத்தால் மாத்ரம் உண்டாகும் பக்ஷத்தில், அந்த ஜ்ஞாநத்தை 'ஸ்ம்ருதி' என்று சொல்வார்கள். 'ஜ்ஞாநம்' என்றால் 'அறிவு'; இவ்விடத்தில் இந்த்ரியம் முதலானவைகளால் ஏற்படும் வஸ்து நிச்சயரூபமான ஜ்ஞாநமே சொல்லப்படுகின்றது. 'அபோஹநம்' என்பதற்கு 'நிவ்ருத்தி' என்பது பொருள். இவ்விடத்தில் அது ஜ்ஞாந நிவ்ருத்தியைக் குறிக்கின்றது. இந்தப் பதத்திற்கு, தர்க்கம் செய்து அதனால் ஏற்படும் ஜ்ஞாநத்தையும் பொருளாகக் கொள்ளலாம். ஸர்வமும் பகவானுடைய நியமநத்தாலேயே ஏற்படுகின்றது என்பது கருத்து.

வசோபி⁴ஶ்ச—வார்த்தைகளாலும். கீழ்ச் சொல்லப்பட்டுள்ள ச்ருதிகளாலும் இந்த மஹர்ஷி வாக்யங்களாலும், 'ப்ரஹ்மம் எல்லாவற்றிற்கும் ஆத்மா' 'எல்லாம் ப்ரஹ்மத்திற்குச் சரீரம்' என்பது அறியப்படுகின்றது. 'இத்யாதி ஶ்ருதிஶதை: இத்யாதி வசோபி⁴ஶ்ச ஸமதிக³ம:' என்பது அந்வயம். இது 'ப்³ரஹ்மைவாபி⁴தீ⁴யதே' என்பதற்கு ஹேது. ச்ருதிகளும் மஹர்ஷி வாக்யங்களும் இப்படிச் சொல்லுகிறபடியால், 'ஸாமாநாதிகரண்யம் சொல்லப்படும் இடங்களெல்லாவற்றிலும் ஸமஸ்த சேதநா சேதநங்களையும் ப்ரகாரமாகவுடைய ப்ரஹ்மமே சொல்லப்படுகின்றது' என்பது வ்யக்தமாகின்றது.

ஸர்வஸ்ய ப்ரஹ்மண: ஸர்வாத்மத்வாபிதாநாத், சிதசிதாத்மகஸ்ய வஸ்துந: தச்சரீரத்வாபிதாநாத், ஶரீரஸ்ய ஶரீரிணம் ப்ரதி ப்ரகாரதயைவ தத்பர்யவஸாநாத் ஶரீரஶரீரிணோஸ்து தர்மபேதேऽபி தயோரஸம்

---

வ்யாஸர் இவர்களுடைய ஸூக்திகளாலும், 'பரப்ரஹ்மம் எல்லாவற்றிற்கும் ஆத்மா; ஸகல சேதநாசேதந ரூபங்களான வஸ்துக்களும் பரப்ரஹ்மத்தின் சரீரம்' என்று நாம் அறிகிறோம். சரீரம் ஆத்மாவை விட்டுத் தனித்து நிற்காததாலால் அது ஆத்மாவுக்கு ப்ரகாரமே என்பதும், அந்தக் காரணத்தால் அந்தச் சரீரத்தைச் சொல்லும் சப்தங்களெல்லாம் அதற்குள் இருக்கும் ஆத்மாவைக் குறிக்கின்றனவென்பதும் வ்யக்தம். சரீரத்திற்கும் அதற்குள் இருக்கும் ஆத்மாவுக்கும் தர்மபேதம் இருக்கையிலும், ஒன்றின் லக்ஷணம் மற்றொன்றுக்கு நேராமல் அவை அஸங்கீர்ணங்களாகவும் இருக்கின்றன. இப்படியெல்லாம் வஸ்து ஸ்திதி இருக்கிறபடியால், 'ப்ரஹ்மம் ஸகலத்தையும் சரீரமாக உடைத்தாயிருக்கின்றது' என்று ப்ரஹ்மத்தின் பெருமையைச் சொல்லும் முக்ய வ்ருத்தங்களாக இருக்கும் ஸாமாநாதிகரண்யங்க

---

'இந்த வாக்யங்களெல்லாம் ப்ரஹ்மத்திற்கும் மற்றவைகளுக்குமுள்ள ஆத்ம சரீர பாவத்தை மாத்ரமே சொல்லுகின்றன. அதனால் ஸாமாநாதிகரண்யம் சொல்லக் கூடுமோ? சரீரத்தைச் சொல்லும் சப்தத்தால் ஆத்மாவைக் குறிக்கக் கூடுமோ?' என்னும் சங்கையை 'ஶரீரஸ்ய ஶரீரிணம் ப்ரதி' இத்யாதியான வாக்யத்தால் பரிஹரிக்கிறார். ப்ரகாரமாகிற சரீரத்தைச் சொல்லும் சப்தங்களெல்லாம் ப்ரகாரியாகிற ஆத்மாவைக் குறிக்கக்கூடுமாதலால் ஸாமாநாதிகரண்யம் உபபந்நம் என்பது ஸமாதாநம்.

வைபவம் ப்ரதிபாதயந்தி:—இப்படி ப்ரஹ்மமும் மற்றை வஸ்துக்களும் ஆத்மாவாகவும் சரீரமாகவும் கலந்து நிற்கையிலும், மற்றை வஸ்துக்களின் லக்ஷணம் ப்ரஹ்மத்திற்கு நேர்வதில்லை என்பதே ப்ரஹ்மத்தின் பெருமை. அந்தப் பெருமையை விளக்குகின்றது இந்த ஸாமாநாதிகரண்யம்.

தர்மபேதேऽபி — ப்ரஹ்மத்திற்கும் மற்றை வஸ்துக்களுக்கும் வெவ்வேறு தர்மங்கள் இருக்கையிலும், அவை இரண்டும் அஸங்கீர்ணங்களாகவே நிற்கின்றன. 'லோகத்தில் வெவ்வேறு தர்மங்களை உடைய பொருள்களுக்கே பரஸ்பர ஸம்பந்தத்தால் ஸாங்கர்யம் உண்டாவதை நாம் பார்க்கிறோம். ஒரு கட்டையை உப்பளத்தில் ஸ்வல்ப காலம் ஸம்பந்தப்படும்படி வைத்தால், அந்தக் கட்டை உப்புப் பூத்து விடுகின்றது. அது போல வெவ்வேறு தர்மங்களையுடைய ப்ரஹ்மத்திற்கும் மற்றை வஸ்துக்களுக்கும் பரஸ்பர ஸம்பர்க்கத்தால் ஏன் லக்ஷண ஸாங்கர்யம் நேரவில்லை?' என்று கேட்டால், அப்படி தர்ம பேதம் இருக்கையிலும் அது நேரவில்லை என்பதே ப்ரஹ்மத்தின் பெருமை என்பது இதன் தாத்பர்யம்.



கரேண ஸர்வஶரீரம் ப்ரஹ்மேதி ப்ரஹ்மணோ வைபவம் ப்ரதிபாதயத்பி: ஸாமாநாதிகரண்யாதிபி: முக்யவ்ருத்தை: ஸர்வசேதநாசேதநப்ரகாரம் ப்ரஹ்மைவாபிதீயதே ।

ஸாமாநாதிகரண்யம் ஹி த்வயோ: பதயோ: ப்ரகாரத்வயமுகேந ஏகார்த்தநிஷ்டத்வம் । தஸ்ய ச ஸித்தாந்தே முக்யவ்ருத்தா । ததா ஹி, 'தத் த்வம்' இதி ஸாமாநாதிகரண்யே, 'தத்' இதி பதேந ஜகத்காரணம் ஸர்வகல்யாணகுணாகரம் நிரவத்யம் ப்ரஹ்மாபிதீயதே; 'த்வம்' இதி ச தத் ஏவ ஸாமாநாதிகரண்யவ்ருத்தேந பதேந ஜீவாந்தர்யாமிரூபி தச்சரீரம் ததாத்மதயாவஸ்திதம் தத்ப்ரகாரம் ப்ரஹ்மாபிதீயதே । இதரேஷு பக்ஷேஷு ஸாமாநாதிகரண்யஹாநி: ப்ரஹ்மண: ஸதோஷதா ச ஸ்யாத் ।

---

ளெல்லாம் ஸமஸ்த சேதநாசேதந வஸ்துக்களையும் ப்ரகாரமாக உடைத்தாயிருக்கும் ப்ரஹ்மத்தையே சொல்லுகின்றன.

இரண்டு பதங்கள் இரண்டு ப்ரகாரங்களின் வழியாக ஒரே அர்த்தத்தைக் குறிப்பதன்றோ ஸாமாநாதிகரண்யமென்று சொல்லப்படுகின்றது? அப்படிப்பட்ட ஸாமாநாதிகரண்யம் நமது ஸித்தாந்தத்தில் மாத்ரம் முக்யமாக இருக்கும். இதை 'தத் த்வமஸி' (நீ அதுவாக இருக்கிறாய்) என்னும் வாக்யமே விளக்கும். இந்த வாக்யத்தில் 'தத்' (அது) என்னும் பதம், ஜகத்திற்கெல்லாம் காரணமாகவும் ஸகல கல்யாண குணங்களுக்கும் இருப்பிடமாகவும் எவ்வித தோஷமு மற்றதாகவும் இருக்கும் ப்ரஹ்மத்தைக் குறிக்கின்றது; அந்த 'தத்' என்னும் சப்தத்துடன் ஸமாநாதிகரணமாகச் சொல்லப்பட்டுள்ள 'த்வம்' (நீ) என்னும் பதம், ஜீவனுக்கு அந்தர்யாமியாகவும் அந்த ஜீவனைச் சரீரமாக உடையதாகவும் அந்த ஜீவனாகிற சரீரத்திற்கு ஆத்மாவாகவும் அந்தச் சரீரத்தை ப்ரகாரமாக உடையதாகவும் இருக்கும் ப்ரஹ்மத்தைக் குறிக்கின்றது. மற்றை ஸித்தாந்தமொன்றிலும் இப்படிப்பட்ட ஸாமாநாதிகரண்யம் கிடைக்கமாட்டாது; ப்ரஹ்மத்திற்குத் தோஷத்துடன் கூடியிருக்கும் தன்மையும் ப்ரஸங்கிக்கும்.

---

ஸாமாநாதிகரண்யம் ஹி—இப்படி ஸாமாநாதிகரண்யம் சொல்லக்கூடுமானாலும், அதற்கு முக்ய வ்ருத்தத்வம் எப்படி ஸம்பவிக்கும் என்பதை விசாரிக்கிறார். இவ்விடத்தில், ஏற்கெனவே ஸாமாநாதிகரண்யத்திற்கு "பிந்நப்ரவ்ருத்திநிமித்தாநாம் ஶப்தாநாமேகஸ்மிந்நர்த்தே வ்ருத்தி: ஸாமாநாதிகரண்யமிதி ஹி தத்விதஃ" [81-வது பக்கம் பார்க்க] என்று சொல்லப்பட்டிருக்கும் லக்ஷணம் அநுஸந்தேயம்.

ததா ஹி—ஸாமாநாதிகரண்யத்தின் முக்ய வ்ருத்தத்வம் உபபாதிக்கப்படுகின்றது. இந்த உபபாதநம் 58-வது பக்கத்தில் விஸ்தாரமாகச் செய்யப்பட்டிருக்கிறபடியால் இவ்விடத்தில் அதன் ஸங்க்ரஹமே செய்யப்படுகின்றது.

இதரேஷு பக்ஷேஷு—மற்றை சாங்கர யாதவ பாஸ்கர பக்ஷங்களில். அந்தப் பக்ஷங்களில் எப்படி ஸாமாநாதிகரண்ய லக்ஷண ஹாநியும் ப்ரஹ்மத்திற்குத்

ஸர்வதா³ ஸம்ப⁴வதி | 'ப்³ரஹ்மைவமவஸ்தி²தம்' இத்யத்ர 'ஏவம்' ஶப்³தா³பி⁴ஹித ப்ரகாரதயைவ விசித்ர சேதநாசேதநாத்மக ப்ரபஞ்ச

---

ஸர்வதா³ ஸம்ப⁴வதி—அவஸ்தி²தமிதி. இதன் தாத்பர்யமாவது:—ச்ருதிகளிலும் புராணங்களிலும் 'ப்ரஹ்மம் இவ்விதமாக இருக்கின்றது' என்று சொல்லப் பட்டிருக்கிறது. இதில் 'இவ்விதம்' என்று எந்த ப்ரகாரம் நிர்த்தேசிக்கப் படுகின்றதோ அந்த ப்ரகாரத்துடன் கூடியதாகவே ஸகல அவஸ்தைகளிலும் அந்த ப்ரஹ்மம் இருக்கிற படியால், அந்த அவஸ்தைக ளெல்லாவற்றிலும் சேதநாசேதநங்க ளடங்கியுள்ள ப்ரபஞ்சம் ஸ்தூலமாகவும் ஸூக்ஷ்மமாகவும் இருக்கின்றது என்பது ஸித்தம். அப்படி இருக்

---

தோஷமும் ஏற்படுகின்றன என்பதை அந்தந்தப் பக்ஷத்தைக் கண்டிக்கும் அவஸரத்தில் செய்யப்பட்டுள்ள உபபாதநத்தில் கண்டுகொள்க.

ஸர்வதா³ ஸம்ப⁴வதி—'இந்தச் சரீர சரீரி பாவமெல்லாம் ஸ்ருஷ்டிக்குப் பிறகே உபபந்நமாகும். ஸ்ருஷ்டிக்குமுன் ப்ரஹ்ம மொன்றே இருந்தபடியால் அப்பொழுது எதற்கும் ப்ரஹ்மத்திற்கும் சரீர சரீரி பாவம் சொல்வது ஸாத்யம்?' என்று செய்யக்கூடிய சங்கைக்கு ஸமாதாநம் சொல்லுகிறார். 'ஸ்ருஷ்டிக்குப் பிறகு இந்தச் சேதநா சேதநாத்மகமான ப்ரபஞ்சம் ஸ்தூலாவஸ்தையில் இருக்கின்றது; ஸ்ருஷ்டிக்கு முன் அது ஸூக்ஷ்மாவஸ்தையிலிருந்தது; இதுதான் விசேஷம். ஸ்ருஷ்டிக்கு முன் சேதநா சேதந வஸ்துக்களே இல்லை என்று சொல்வது பிசகு' என்பது தான் ஸமாதாநம். ஆகையால் எப்பொழுதும் சரீர சரீரி பாவம் சொல்லக்கூடும் என்பது தாத்பர்யம்.

'ப்³ரஹ்மைவ ஸமவஸ்தி²தம்' [ப்ரஹ்மம் இவ்விதம் இருக்கின்றது] என்று ச்ருதி ஸ்ம்ருதிகள் சொல்லுகின்றன. 'ஸர்வம் க²ல்விதம் ப்³ரஹ்ம' 'ஜ்யோதீம்ஷி விஷ்ணு:' இவை முதலிய வாக்யங்கள் விவக்ஷிதங்கள். இந்த வாக்யங்களில் ப்ரஹ்மம் எவ்விதம் இருக்கின்றது என்று சொல்லப்படுகின்றதோ, அந்தந்த விதங்களைக் குறிக்கும் விசேஷணங்களை உடையதாகவே ப்ரஹ்மம் எல்லா அவஸ்தைகளிலும் இருக்கின்றதென்று நாம் அறிகிறோம். ஆகையால் ஸ்ருஷ்டிக்கு முன்னும் ஸ்ருஷ்டிக்குப் பிறகும் இரண்டு அவஸ்தைகளிலும், ப்ரஹ்மத்தின் விசேஷணமாக இருக்கும் இந்தச் சேதநாசேதநாத்மகமான ப்ரபஞ்சம் இருத்தல் வேண்டும். ஆகையால் ஸர்வாவஸ்தைகளிலும் சரீர சரீரிபாவம் சொல்வதில் எவ்வித அநுபபத்தியும் இல்லை.



ஸ்தூ²லஸ்ய ஸூக்ஷ்மஸ்ய ச ஸத்³பா⁴வ: | ததா² ச "ப³ஹு ஸ்யாம் ப்ரஜாயேய" இத்யயமர்த²: ஸம்ப⁴வநோ ப⁴வதி | ததை²வ ஸர்வஸ்ய வஸ்துந: கார்யதயா காரணதயா ச நாநாஸம்ஸ்தா²நஸம்ஸ்தி²தஸ்ய ஸம்ஸ்தா²நதயா அப்ருத²க்ஸித்³த⁴தயாவஸ்தி²தமிதி |

தத்ர ஸம்ஸ்தா²நரூபேண ப்ரகாரதயா 'ஏவம்' ஶப்³தா³ர்த²த்வம் ஜாதிகு³ணயோரேவ த்³ருஷ்டம் ந த்³ரவ்யஸ்ய; த்³ரவ்யஸ்யாப்ருத²க்ஸித்³தி⁴யோக³ஸ்ய

---

தால் தான், 'ப³ஹு ஸ்யாம் ப்ரஜாயேய' [நான் பஹுவாக ஆவேன்] என்னும் பஹுபவநமும் உபபந்நமாகும். ஆகையால் சேதநாசேதந வஸ்துக்களெல்லாம், கார்ய வஸ்துவாகவும் காரண வஸ்துவாகவும் இம்மாதிரி பற்பல அமைப்புக்களுடன் இருக்கும் ப்ரஹ்மத்துடனேயே எப்பொழுதும் சேர்ந்து அந்த ப்ரஹ்மத்திற்கு விசேஷணங்களாக இருக்கின்றன என்பது ஏற்படுகின்றது.

தத்ர ச............ப்ரவம்ஶிதம்—'அப்படி, ஒரு பதார்த்தத்துடன் எப்பொழுதும் சேர்ந்தே அதற்கு விசேஷணமாக இருக்கும் தன்மையானது ஜாதி குணம் இவைகளின் விஷயத்தில் மாத்ரம் காணப்படுகின்றதே தவிர, த்ரவ்யத்தின் விஷயத்தில்

---

"ப³ஹு ஸ்யாம் ப்ரஜாயேய" இத்யயமர்த²: ஸம்ப⁴வநோ ப⁴வதி—இப்படி ஸ்ருஷ்டிக்குப் பூர்வ காலத்திலும் சேதநாசேதந வஸ்துக்கள் இருந்தால் மாத்ரம், 'நான் பஹுவாக ஆகக்கடவேன்' என்று ப்ரஹ்மம் ஸங்கல்பிக்க உபபத்தி உண்டு. அப்படி அவைகள் இல்லாமலே ப்ரஹ்மம் பஹுவாக ஆவதற்கு ஸங்கல்பித்தால், ப்ரஹ்மமே மாறுதல் அடையவேண்டி வரும். அப்படி அது மாறுதல் அடைகின்றது என்று சொல்வது, 'ப்ரஹ்மம் விகாரமற்றது' என்று சொல்லும் ச்ருதி வாக்யத்திற்கு விருத்தம். தவிரவும், ப்ரஹ்மம் சேதநாசேதந வஸ்துக்களைப் புதிதாக ஸ்ருஷ்டித்து அம்மாதிரி அது பஹுவாக ஆகின்றது என்று சொல்லும் பக்ஷத்தில், அது, 'சேதநனென்கிற ஜீவனும் அசேதநமாகிற ப்ரக்ருதியும் இரண்டும் உத்பத்தியற்றவை' என்று சொல்லும் ச்ருதி வாக்யத்திற்கு விருத்தம். ஸ்ருஷ்டிக்கு முன்னும் இவை இருந்தன வென்று சொல்லும் பக்ஷத்தில் இம்மாதிரியான விரோதங்கள் வரமாட்டா என்பது தாத்பர்யம்.

ஸம்ஸ்தா²நதயா அவஸ்தி²தம்—அப்ருதக் ஸித்த தர்மமாக இருக்கின்றது. அதாவது, ப்ரஹ்மத்தை விட்டுத் தனித்து ஸ்வதந்த்ரமாக நிற்கக் கூடாததாக இருக்கின்றது என்பது தாத்பர்யம்.

'ஜாதிகு³ணயோரேவ த்³ருஷ்டம்'—'பசு' என்பது வ்யக்தி; 'பசுத்தன்மை' (கோத்வம்) என்பது ஜாதி. 'வெண்மை' என்பது குணம்; 'வெண்மையை உடைய பொருள்' என்பது குணி. இவைகளுக்கன்றோ தனித்து நிற்கக் கூடாமை லோகத்தில்

த்ரவ்யஸ்ய 'தண்டீ' சப்தாபிதேயதயா ஸம்பந்தஸ்ய ப்ரகாரத்வ யோக்யஸ்ய । உச்யதே । த்ரவ்யஸ்யாபி தண்டகுண்டலாதே: ப்ருதக்ஸ்தித ப்ரகாரத்வம் த்ருஷ்டமேவ । தத்ர, தண்டாதே: ஸ்வநிஷ்டஸ்ய ப்ருதக்ஸ்தித ப்ரகாரத்வே மத்வர்தீயப்ரத்யயோ த்ருஷ்ட:, யதா தண்டீ குண்டலீதி; அதோ ஜாதிகுணவத்தயா சேதநாசேதநஸ்ய ப்ருதக்ஸித்தஸ்ய வஸ்து ஸம்பந்தப்ரகாரதயா ஸாமாநாதிகரண்யேந ப்ரதிபாதநம் ந யுஜ்யதே । அத்ரோச்யதே । கௌ:, அச்வ:, மநுஷ்ய:, தேவ இத்யாதி பூதஸங்காதரூபாணாம் த்ரவ்யாணாமேவ, 'தேவதத்தோ மநுஷ்யோ ஜாத: புண்யவிசேஷேண' 'யஜ்ஞதத்தோ கௌர் ஜாத: பாபேந கர்மணா' [illegible] புண்யாதிரேகேண தேவோ ஜாத:' இத்யாதி

---

காணப்படவில்லை. மற்றொரு த்ரவ்யத்துடன் சேர்ந்தே இருக்கவேண்டும் என்னும் நியமமின்றிக்கே தனித்து இருப்பதற்கு யோக்யமாயுள்ள த்ரவ்யத்திற்கு, அந்த மற்றொரு த்ரவ்யத்துடன் ஸாமாநாதிகரண்யம் சொல்லும்படி ப்ரகாரத்தன்மையை ப்ரதிபாதிப்பது யுக்தமாகுமோ?' என்று ஒரு ப்ரச்நம் கேட்கலாம். 'யுக்தமாகும்' என்பதே நம்முடைய ப்ரத்யுத்தரம். தண்டம் குண்டலம் முதலிய த்ரவ்யங்களுக்கு அம்மாதிரியான ப்ரகாரத் தன்மையை நாம் காண்கிறோமல்லவா? ஆனால், 'தண்டம் முதலிய ஸ்வதந்த்ர த்ரவ்யங்கள் மற்றொரு த்ரவ்யத்திற்கு ப்ரகாரங்களாக இருக்கும் பொழுதெல்லாம், 'தண்டம் முதலியவைகளுடன் கூடியிருக்கின்றது அந்த மற்றொரு த்ரவ்யம்', என்று நாம் வ்யவஹரிக்கிறோமே தவிர, அந்த த்ரவ்யம் தண்டமே என்று ஸாமாநாதிகரண்யம் நாம் சொல்லவில்லை. ஆகையால், த்ரவ்யமாயிருக்கும் சேதநாசேதந வஸ்துக்களை, த்ரவ்யமின்றிக்கு ஜாதியாக இருக்கும் பசுத்தன்மைக்குத் துல்யமாக பாவித்து, அவைகளுக்கு ஈச்வரனுடன் ஸாமாநாதிகரண்யம் சொல்லுமளவு ப்ரகாரத் தன்மையை ப்ரதிபாதிப்பது யுக்தமாக மாட்டாது' என்று ஒரு ஆக்ஷேபம் செய்யலாம். இதற்கு ஸமாதாநம் சொல்லுகிறோம். ஸ்ம்ருதியிலும் வேதத்திலும் நாம் இம்மாதிரியான ஸாமாநாதிகரண்ய ப்ரதிபாதநத்தைப் பார்க்கிறோம். 'தேவதத்தன் ஒரு புண்ய விசேஷத்தால் மநுஷ்யனானான்' என்றும், 'யஜ்ஞதத்தன் ஒரு பாப விசேஷத்தால் மாடானான்' என்றும், 'மற்றொருவன்

---

காணப்படுகின்றது. ஒரு த்ரவ்யத்திற்கும் மற்றொரு த்ரவ்யத்திற்கும் அப்படிப்பட்ட ஸ்திதி காணப்படவில்லையே. இது இவ்விடத்தில் செய்யப்படும் ஆக்ஷேபம்.

மத்வர்தீயப்ரத்யயோ த்ருஷ்ட:—'தண்டீ' (தண்டத்தை உடையவன்) என்னும் சப்தத்தில் 'தண்டம்' என்பது பகுதி; அதற்கு மேல் இருக்கும் ப்ரத்யயம் விகுதி. இதை 'மத்வர்தீயப்ரத்யய:' என்று சொல்வார்கள். அந்த விகுதி 'அதை உடையது' என்பதைக் குறிக்கும். தண்டம் போன்ற ஒரு த்ரவ்யம் அதை உடைய புருஷன்

ஸ்ரீ:

# வேதாந்த தீபிகை.

வேதாந்த விசாரம் செய்யும்

ஓர் மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

(ஸ்ரீ வைஷ்ணவஸித்தாந்த ஸபையாரால் ப்ரசுரிக்கப்படுகிறது)

1927—28

ப்ரபவ—விபவ.

[ஸம்புடம்—18.]

பத்ராதிபர் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர் பி. ஏ., எல். டி.

சென்னை.
சுதேசமித்ரன் பிராஞ்ச் ப்ரஸ்
1928.

# விஷய ஸூசிகை.


| | |
|---|---|
| அடியவர்க்கு மெய்யனிடம் ஸ்வாமி தேசிகனின் ஈடுபாடு | 7 |
| அத்வைத விசிஷ்டாத்வைத ஸித்தாந்தங்களின் ஸங்க்ரஹ வினாவிடை | 25 |
| ஆழ்வாருடைய அநுபவ ப்ரகாரம் | 121 |
| ஊழ் | 196 |
| ஒரு விண்ணப்பம் | 237 |
| ஒரு உபநிஷத் வாக்யத்தின் அர்த்தவிசாரம் | 334 |
| கம்பர் ஸ்ரீ வைஷ்ணவ சமயத்துக்குச் செய்தருளிய பேருதவிகள் | 14,137,165 |
| கலி மஹிமை | 65 |
| **கடிதங்கள்:—** | |
| ஆரியர்களின் துர்த்தசை | 306 |
| ஒரு ப்ரச்நம் | 180 |
| சில ஸம்சயங்கள் | 80 |
| தத்வபோதிநீ | 206 |
| பஸவன் குடி வ்ருத்தாந்தம் | 256 |
| மேல் நாட்டாரின் நாகரிகம் | 303 |
| **விமர்சம்:—** ஆரோக்ய தீபிகை, ஜிஜ்ஞாஸை, உத்யாந பத்ரிகை | 51 |
| ,, ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகன் ஸ்தோத்ரஜாலங்கள் | 82 |
| ,, ஸ்ரீபகவத் த்யாநஸோபாந ஸ்ரீ தசாவதார ஸ்தோத்ரங்களின் வ்யாக்யை | 208 |
| ,, திருக்குடந்தை ஸ்ரீ ஆராவமுதன் பெருமை | 208 |
| ,, ஸ்ரீ கீதாபாஷ்யத்தின் தமிழ்மொழி பெயர்ப்பு | 343 |
| விவாஹ வயது மசோதா கண்டநம் | 258 |
| ஸம்சயோச்சேதிநீ | 144 |
| ஸ்ரீ தேசிகாவதார ரஹஸ்ய சிந்தநம் | 49 |
| ஸ்ரீ ராமாநுஜாசார்யரும் ஸ்ரீ ஸ்ரீகண்டாசார்யரும் | 148 |
| ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகனுடைய கவிதையும் தத்வவிசாரமும் | 149 |
| ஸ்ரீ வித்யோல்லாஸிநீ ஸபா | 179 |





| | |
|---|---|
| ஸ்ரீ ஸத்வித்யா பாடசாலை, சைதாப்பேட்டை | 180 |
| ஸ்ரீ உபயவேதாந்த ப்ரவர்த்தக ஸபை, மல்லேச்வரம் | 255 |
| ஸ்ரீ வை. ஸி. ஸபைக்கு ஒரு ஸுஹ்ருத்தின் ஸஹாயம் | 257 |
| ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குள் ஒற்றுமை | 307 |
| ஸ்ரீ வைஷ்ணவ வித்வத் ஸபை | 310 |
| காயத்ரீயின் மஹிமையும் அதன் ப்ராமாண்யமும் | 126 |
| ச்ருதி கீதை | 321 |
| சகுநபலம் | 340 |
| சாஸ்த்ரமும் அதன் ப்ராமாண்யமும் | 170,213 |
| சூத்ரன் என்ற பதத்தைப்பற்றிய விசாரம் | 297 |
| தர்மகார்யங்களுக்காகப் போடப்படும் லாடெரி | 249 |
| திருவிருத்தத்தில் சில பாசுரங்கள் | 157 |
| திவ்ய ப்ரபந்தம் | 89 |
| பகவானுடைய ஜகத்காரணத்வம் | 34,57,107 |
| பக்தியோகம் | 245 |
| பசுபத்யதிகரணம் | 97 |
| **பத்ராதிபரின் குறிப்புகள்:—** ஆசாரச் சீர்திருத்தச் சங்கமும் வைதிகர்களும் | 115 |
| இவ்வர்ஷத்திய உபாகர்மம் | 320 |
| இவ்வர்ஷத்திய மஹா ஸங்கம் | 188 |
| காஞ்சீபுரம் ஸ்ரீ வைஷ்ணவ வித்வத்ஸதஸ் | 318 |
| காலஞ்சென்ற ம. ம. உபாத்யாய பண்டித வெங்கடஸுப்பா சாஸ்த்ரிகள் | 156 |
| தேவாலயங்களின் நிந்தை | 23 |
| நமது ஸபையின் பண்டித உபந்யாஸங்கள் | 86 |
| நமது பெரியோர்களின் முக்ய தர்மங்களுள் ஒன்று | 150 |
| நெல்லூரில் அடித்த பெருங்காற்று | 56 |
| பகவத்கீதையின் ச்லாகை | 349 |
| பாச்சாத்ய ஸ்த்ரீயின் ஹிந்துமத ப்ரவேசம் | 181 |
| பாச்சாத்யர்களின் நாகரிகம் | 319 |
| மஹாத்மா காந்தியும் வர்ணதர்மாநுஷ்டாநங்களும் | 83 |
| வர்ணாச்ரம தர்ம மஹாஸங்கம் | 88 |
| விவாஹச் சீர்திருத்தம் | 153 |
| ஸ்ரீ வை. ஸி. ஸபை | 20 |
| ஸ்ரீ யு. பி. க்ருஷ்ணமாசார்யரும் மஹாத்மா காந்தியும் | 53 |

| | |
|---|---|
| ஸ்ரீ உப. வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் | 155 |
| ஸ்ரீ வை. ஸி. ஸபையின் வார்ஷிகமஹா ஸங்கம் | 156, 211, 234 |
| ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குள் ஒற்றுமை | 259, 283, 311 |
| ஸ்ரீ வைஷ்ணவ வித்வத்ஸபை | 260 |
| ஸ்ரீ பாஷ்ய விமர்சந பரீக்ஷா | 352 |
| ஹிந்து மத விவாஹச் சீர்திருத்த பர்யாலோசனை | 119, 186 |
| ஹிந்து முஸல்மன் விவாஹம் | 314 |
| மங்கைமன்னன் மறம் | 272, 295 |
| மதவிசாரம் | 283 |
| மநுஸ்ம்ருதி | 109, 133 |
| மோக்ஷம் | 199 |
| விவாஹவயது மசோதா | 151,279 |
| ஸ்ரீ பகவத்ராமாநுஜ பாஷ்யமும் மோக்ஷ ஸ்வரூபமும் | 189 |
| ஸ்ரீ பகவத்கீதையின் மஹிமையும் அதன் பரமதாத்பர்யமும் | 1,43 |
| ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குள் ஒற்றுமை | 261 |
| ஸ்ரீ. வை. ஸி. ஸபையின் உபந்யாஸங்கள்:— அர்ச்சாவதார வைபவமும் உபநிஷத்துக்களின் பெருமையும் | 81 |
| ஆஸ்திக்யம் | 113 |
| ஸ்த்ரீ தர்மம் | 73 |
| கர்மாநுஷ்டாநம் | 77 |
| மோக்ஷோபாயம் | 146 |
| ஸ்ரீ வை. ஸி. ஸபையின் 17-வது [illegible]த்து அறிக்கை | 202 |
| ஷை ஸபையின் 18-வது வார்ஷிக மஹாஸங்கத்தின் ஸ்வாகத பத்ரிகையும் உபந்யாஸ விஷயங்களும் | 209,210 |
| மதுராந்தகத்தில் நடந்த ஸபை விவரம். | 227 |
| ஸபையின் தீர்மானங்கள் | 231 |
| ஷை நிர்வாஹக் கூட்டம் | 232 |
| வித்வத் ஸம்மாநம் | 233 |
| ஸம்சயோச்சேதினீ ஸமர்த்தநம் | 223 |
| ஹிந்து விவாஹ ரத்து மசோதா | 260 |
| ஹிந்து விதவைகள் தலைமயிரை நீக்கவேண்டுமோ? | 335 |


சுதேசமித்திரன் பிராஞ்சு பிரஸ், மவுண்ட்ரோட், சென்னை.

'வேதாந்த தீபிகை' மறுபதிப்பு.

ஸ்ரீ:

# ஸ்ரீ ஜிதந்தே ஸ்தோத்ரம்.

(ஸ்ரீ பெரிய வாச்சான் பிள்ளை
அருளிச் செய்த வ்யாக்யானத்துடனும்
ஸ்ரீ உப. புத்தங்கோட்டஹம் ஸ்ரீநிவாஸாச்சார்யர்
அருளிச் செய்த வ்யாக்யானத்துடனும் கூடியது.)

---

சென்னை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையாரால்
பிரசுரிக்கப்பட்டது.

1928.

விலை அணா 6.

# விற்பனைக்குத் தயார்.

பின்வரும் புஸ்தகங்கள்

விற்பனைக்குத் தயாராக விருக்கின்றன.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| ஸ்ரீ ஸச்சரித்ர ரக்ஷை (தமிழ் மொழி பெயர்ப்புடன்) | 0 | 14 | 0 |
| ஸ்ரீ பரமபத ஸோபானம் (தமிழ் வியாக்யானத்துடன்) | 0 | 8 | 0 |
| ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம் (ஸ்ரீ பெரிய வாச்சான் பிள்ளை அருளிச் செய்த வ்யாக்யானத்துடன் கூடியது) | 0 | 10 | 0 |
| ஸ்ரீ ஜிதந்தே ஸ்தோத்ரம் (தமிழ் வியாக்யானத்துடன்) | 0 | 6 | 0 |
| நம்மாழ்வார் வைபவமும் திருவாய் மொழியின் பெருமையும் | 0 | 4 | 0 |
| வேதாந்த தீபிகை (மாஸ பத்ரிகை) வருஷ சந்தா | 3 | 0 | 0 |

காரியதரிசி,

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை,

திருவல்லிக்கேணி, சென்னை.

சுதேசமித்திரன் பிராஞ்சு பிரஸ், மௌண்ட் ரோட், சென்னை.

## வேதாந்த தீபிகை சந்தாதாரர்களுக்கு விஜ்ஞாபனம்.

'வேதாந்த தீபிகை'யின் 19-வது ஸம்புடம் இந்த சஞ்சிகையுடன் ஆரம்பமாகின்றது. பல சந்தாதாரர்களுக்கு பழைய சந்தா பாக்கியைப்பற்றிப் பல ஸமயங்களில் பலப்ரகாரம் விஜ்ஞாபித்துக்கொண்டும் இன்னும் அந்த ஸ்வாமிகள் சந்தாவை அனுப்பத் திருவுள்ளம் பற்றாதது சோகிக்கக் கூடியதாகவிருக்கிறது. சந்தாவை முன்னதாக அனுப்பவேண்டுமென்ற வ்யவஸ்தையிருந்தும் வருஷ பூர்த்தியடைந்த பின்னர்கூட, அதை அனுப்பத் திருவுள்ளம் பற்றாவிட்டால் ஸபைநிர்வாகம் எவ்விதம் ஸாத்யமென்பதை ஸ்வாமிகள் சிறிது சிந்திப்பார்களானால் இவ்வளவு ச்ரமமேற்படாது. சந்தாதாரர்கள் எல்லோரும் பழையபாக்கி யிருக்குமானால் அதையும் சேர்த்து புதிய வருஷ சந்தாவை உடனே அனுப்பவேண்டுமென்று ஸவிநயம் பிரார்த்திக் கொள்ளுகிறேன்.

காரியதரிசி, ஸ்ரீ வை. ஸி. ஸபை,
திருவல்லிக்கேணி, சென்னை.

## வேதாந்த தீபிகை.

வேதாந்த தீபிகை பத்ரிகை ஸம்பந்தமான கடிதங்கள், ஸ்ரீ வாஸுதேவாசார்யர் ஸம்பாதகர் மாம்பலம், சைதாப்பேட்டை போஸ்டு என்னும் விலாஸத்திற்கும்

மற்றக் கடிதங்கள், ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்மா சார்யர், காரியதரிசி, ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை, திருவல்லிக்கேணி சென்னை என்னும் விலாஸத்திற்கும் அனுப்பப்பட வேண்டும்.

### ஸ்ரீ வை. ஸி. ஸபை சந்தா வரவு.

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்ரீ உ. வே. | ராவ்ஸாஹிப் ஸுந்தரராஜ அய்யங்கார், வில்லிவாக்கம் | 3 | 0 | 0 |
| ,, | வானமாமலை அய்யங்கார், நரஸிம்மபுரம் | 3 | 0 | 0 |
| ,, | வி. என். ஸீதாபதி நாயுடுகாரு, | 9 | 4 | 0 |
| ,, | ஆர் கோதண்டராம அய்யங்கார், கும்பகோணம் | 3 | 0 | 0 |
| ,, | எம். ஸ்ரீநிவாஸ அய்யங்கார், சேலம் எக்ஸ்டென்ஷன் | 3 | 0 | 0 |
| ,, | எல். வி. தேசிகாசாரியார், தின்னனூர் | 3 | 0 | 0 |
| ,, | எஸ். கோபால அய்யங்கார், திண்டிவனம் | 5 | 0 | 0 |
| ,, | எம். ராம அய்யங்கார், தாண்டவாய் | 2 | 0 | 0 |
| ,, | வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், செங்கல்பட்டு | 3 | 0 | 0 |
| ,, | வி. வி. ஜயலக்ஷ்மி அம்மாள், புரசவாக்கம் | 3 | 0 | 0 |
| ,, | வி. எஸ். ஸ்ரீநிவாஸ அய்யங்கார், குப்பம் | 3 | 0 | 0 |
| ,, | டி. எஸ். நரஸிம்மாசாரியர், முசிறி. | 3 | 0 | 0 |
| ,, | எ. சேஷாசாரியர், மதுராந்தகம் | 3 | 0 | 0 |
| ,, | என். கே. மோஹனரங்கம் பிள்ளை, ஜியார்ஜ் டவுன் | 3 | 0 | 0 |
| ,, | டி. கே. சுந்தரராஜ அய்யங்கார், திருமணம் | 1 | 8 | 0 |
| ,, | நரஸிம்மாசார்யர், மோஹனூர் | 3 | 0 | 0 |
| ,, | எஸ். ராகவாச்சாரியர், திருவல்லிக்கேணி | 3 | 0 | 0 |
| ,, | ஜி. ஆர். ராமஸ்வாமி அய்யங்கார், நெல்லூர் | 3 | 0 | 0 |
| ,, | [illegible]சாரியார், வாலாஜாபாத் | 3 | 0 | 0 |

# கேஸரியின்
# உயர்தரமான
# ஔஷதங்கள்.

கேஸரியின் லோத்ரா, அமிருதம், அர்க்கா, ஆகிய மூன்றும் கேசரியின் அத்புத ஔஷதங்களென்பது உலகப்பிரஸித்தம்.

பாலர்களுக்கும் முதியோருக்கும் மிக உபயோகமானவை.

## கேஸரி குடீரம்

இந்திய மருந்து வியாபாரிகள்,
எழும்பூர், சென்னை.

கிளை ஆபீஸ்:—பெங்களூர்
எல்லா விடங்களிலும் ஏஜண்டுகளிருக்கின்றனர்.



மெடல்கள் பெற்றதும், ரிஜிஸ்டர் நெ. 329, உன்னதமான,

எப்பொழுதும்

## C. B. S. ராவின் சர்பத்துகளையே

உபயோகியுங்கள்.

குளிர்ச்சியையும், மகிழ்ச்சியையும் உண்டாக்கக்கூடியது. உண்மையானது உத்திரவாதமுள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நன்னாரிவேர் புட்டி ரூ. | 1—8 | லெமன் ,, ,, | 1—8 | பாதாமி ரூபா | |
| அனசி ,, ,, | 1—8 | ரோஜா ,, ,, | 1—12 | | 1—12. |

குழந்தைகளுக்கான கைகண்ட மருந்துகள்.

கோரோஜனை மாத்திரை (100 கொண்ட) புட்டி 1-க்கு 12 அணா
கஸ்தூரி மாத்திரை ,, ,, 8 அணா.

வியாபாரிகளுக்கும் தக்க கமிஷன் உண்டு.

தயாரிப்பவர்:—

**C. B. ஸ்ரீனிவாச ராவ், ஆயுர்வேத வைத்யர்,**
**92, வெங்கடாசல முதலி தெரு, மீர்சாஹிப்பேட்டை,**

# விளம்பரம்.

## திருமழிசை கோயில் கந்தாடை உபந்யாஸ ரத்னம்.

## உ. வே. வித்வான் ஸ்ரீநிவாஸாசாரியர்

## ஸ்வாமியால் வெளியிடப்பட்ட க்ரந்தங்களின் விவரம்.

“வ்யாஸாய விஷ்ணு ரூபாய வ்யாஸ ரூபாய விஷ்ணவே” என்கிறபடிதே ஸ்வயம் வ்யாஸ ரூபியாய்க் கொண்டு வேதங்களைப் பிரித்தும் யாவரும் எளிதி லறிந்து உஜ்ஜீவிக்கும்படியாக ‘பாரத: பஞ்சமோவேத:’ என்கிறபடியே வெளியிடப் பட்ட ஐந்தாவது வேதமான ஸ்ரீமத் மஹாபாரத ஸாரமான ஸ்ரீமத் பகவத்கீதைக்கு ஸ்ரீமத் ராமாநுஜ பாஷ்யமும், அதின் மொழி பெயர்ப்பும், ஸ்ரீமத் மணவாளமாமுனிகள் அருளிச்செய்த ஸ்ரீமத் கீதார்த்த ஸங்க்ரஹ தீபிகையின் மொழி பெயர்ப்பும், ஸ்ரீமத் வாதிகேஸரி அழகிய மணவாள ஜீயர் அருளிச் செய்த ஸ்ரீமத் பகவத் கீதையின் வெண் பாவும் விசேஷக் குறிப்புடன் சேர்த்து 1-வது அத்யாயம் தெலுங்கிலும், தமிழிலும் 1928ளும் வெளியிடப்பட் டிருக்கிறது. மேல் அத்யாயங்கள்.

ராயல் 8-பேஜ் ஸைஸில் 4-பாரம் கொண்ட ஸஞ்சிகை மூலம் தவறுமல் ஒவ் வொரு மாதமும் 10-ம் தேதி அடியேனால் பிரசுரம் செய்யப்பட்டுவரும்.

வெளியூரில் வாஸம் செய்யப்பட்ட சந்தாதாரர்களுக்கு மாதம் மாதம் புக்போஸ்டு மூலமாய் 6 மாதத்திய சந்தா ரூ. 1—8—0 வீதம் 1-வது ஸஞ்சிகை V. P. மூலமாகவும் மேல் ஸஞ்சிகைகள் புக்போஸ்டு மூலமாகவும் அனுப்பப்படும். தனி க[illegible]பி விலை அணு 5.

## ஸ்ரீ ராமாயண சாரம்.

இதில் அடங்கிய விஷயங்கள்.

(1) இது வேதவேதாந்த ஸித்தாந்தம் என்னும் விஷயம். (2) ஸ்ரீ ராமாய ணத்தால் தர்மத்தின் ஸ்வரூபம் சொல்லுகிற தென்கிற விஷயம். (3) மோக்ஷத்தி லிச்சை யுடையவனை சேதனனுக்கு ஜகத்காரணத்வாதி விசிஷ்ட வஸ்துவே உபாஸிக் கத் தகுந்தது என்கிற விஷயம். (4) இனி இப்படி மோக்ஷத்தி லிச்சையுண்டாகில் அவனுக்கு உபாஸ்யமான ப்ரஹ்மம் எப்படிப்பட்டதா யிருக்கவேணும். (5) அப்படிப் பட்ட ப்ரஹ்ம ப்ராப்திக்கு உபாயம் என்ன? (6) அந்த உபாயத்தால் அடையத் தகுந்த பலம் என்ன? (7) அந்த உபாயம் புருஷகார மில்லாமல் பலிக்குமா? (8) இப்படிப் பட்ட உபாயத்தை யநுஷ்டிக்கும் அதிகாரியின் ஸ்வரூபம் என்ன? (9) சேஷத்வத்தின் பூர்த்தி எப்படியாகில் உண்டு? (10) சேஷத்வத்தின் பராகாஷ்டை எப்போது ஸித் திக்கும்? (11) அர்த்த பஞ்சக ஜ்ஞானம் வேண்டுமோ? வேண்டாவா? (12) இப்படிப் பட்ட வதிகாரிக்கு முக்கியமாய் வேண்டுவதென்ன? (13) இவனுக்கு பகவல்லாபம் யாரால் கிடைக்கும்? (14) இப்படிப்பட்ட அதிகாரி எவ்வளவு காலம் விளம்பிக்க வேணும்? (15) இவ்வதிகாரி சரீரம் விடுமளவும் செய்யவேண்டிய ப்ரகாரமென்ன? (16) இவ்வதிகாரி வாஸம் செய்யவேண்டிய தேசம் எது? (17) இந்த வதிகாரிக்கு சரீ ரம் விடுமளவும் காலக்ஷேபத்துக்கு உறுப்பானது எது? (18) சாமான்ய தர்மம். (19) விசேஷ தர்மம். (20) காயத்ரியைப்போல் ஸதா ஜபிக்கத்தக்கது.

தெலுங்கு விலை அணு 3. (தமிழ் அச்சிலிருக்கிறது)

## த்ரிமத ஸித்தாந்த ஸாரஸங்க்ரஹம்.

இதில் அடங்கிய விஷயங்கள்.

(1) அத்வைதமத உபந்யாஸம், (2) அதற்கு நம்மிராமாநுஜமுனி அருளிச்செய் யும் பரிகாரம், (3) த்வைத மத உபந்யாஸம், (4) அதற்கு நம்மிராமாநுஜமுனி அரு ளிச் செய்யும் பரிகாரம், (5) விசிஷ்டாத்வைத ஸித்தாந்த நிர்ணயம்.

இதன் விலை அணு 2. (தெலுங்கு அச்சிலிருக்கிறது)

கிடைக்குமிடம்.—

“கீதாம்ருதாலயம்”

“கீதாம்ருதாலயம்” (பிரான்சு)

32, வினைதீர்த்த விநாயகர் கோவில் வீதி, [illegible]ட்டை; மதராஸ்.

186289

உங்கள் ஆரோக்யத்திற்குற்ற தோழன்

# அமிருதாஞ்சனம்.

கீழ்க்கண்ட வியாதிகளுக்கு ஆச்சர்ய நிவாரணி.




| | |
|---|---|
| தலைவலி | இருமல் |
| நரம்புவலி | ஜலிப்பு |
| முதுகுவலி | நெருப்புக்காயம் |
| இடுப்புவலி | காயங்கள் |
| கீல்வாயுவு | சுளுக்குகள் |

மற்றுமுள்ள வலிகளுக்கும் நோவுகளுக்கும்.

## அமிருதாஞ்சனம் டிபோ,

பம்பாய். மதராஸ்.



இது, சென்னை சுதேசமித்திரன் பிராஞ்சு அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு,
சென்னை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை காரியதரிசியால் வெளியிடப்படுவது.